# கல்வெட்டு



# PANDYA ARIKESARI AND THE DATES OF SAIVITE AND VAISHNAVITE SAINTS

Dr. R. NAGASWAMY, M. A., Phd.,

An important Pandya lithic record, perhaps the earliest to have been noticed so far in the city of Madurai, was brought to light from the bed of the Vaigai river in 1961. This is now preserved in the Madurai temple museum. It has been edited by Sri K. G. Krishnan, Superintending Epigraphist, Government of India, in Epigraphia Indica, Vol. XXXVIII, pt. I. In his article[1] Sri Krishnan, draws our attention to many points of interest and assigns this epigraph to one of the early Pandya kings Cēndan who ruled in the first half of the 7th Century A.D.

I had occasion to examine this epigraph recently and prepare an estampage. Sri Krishnan's reading needs revision at some places which is attempted in this paper. The main amendment to Krishnan's reading relates to the name of the king in line 8 of the epigraph. Krishnan reads *Kōc Cēndan maṟṟaimpadu* (கோச்சேந்தன் மற்றைம்பது). The word after Cēndan has been read has *maṟṟai* i. e. 'and', consequently it is taken to stand for the 50th regnal year of Kōc Cēndan. The ruler is identified with Cēndan, the son and successor of Māravarman Avanisūḷāmani.

The revised reading according to me would be "*Kōc Cēndan Māṟan-aimpadu*" which means the 50th regnal year of Cēndan Māṟan (Cēndan's son Māṟan.) The epigraph, is therefore dated in the reign of Māṟan, son of Cēndan and not in the reign of Cēndan himself.

கல்வெட்டு :

1. பாண்டிய குலமணி பிரதீபனுய் ப்ராதுர் பாவஞ் செ
2. ய்து விக்ரமங்களாலரை சடக்கி மறங்
3. கெடுத் தறம்பெருக்கி அக்ராஹாரம் பல
4. செய்த பரிமிதமாகிய ஹிரண்யகர்ப கோ
5. ஸகஸ்ர துலாபாரத்து மஹாதாநங்களாற்
6. கலிகடிந்து மங்கலபுரந் நகரமாக்கி வீ
7. ற்றிருந்து செங்கோனடாவா நின்ற கோச்சே
8. ந்தன் மாறனைம்பதாவது ராஜ்ய ஸம்வத்ஸர
9. ஞ் செல்லா நிற்க வைகை சொம் மதகு ப
10 டுத் தரிகேஸரியானெனப் பியரிட்டு காறெடு
11. வித்து காஞ்ண்தை இடை அடைத்து
12. . . . . . . . . . . . . . . .

1. K. G. Krishnan, 'Madurai Inscription of Pandyan Chendan', *Epigraphia Indica* Vol. XXXVIII-Pt. I, 1969, pp. 27-32.

I give the revised reading for the following reasons. The first letter is long *mā* and not short *ma*. Krishnan himself has noticed the presence of the long *ā* sign, added to the letter *ma*. and says in the foot note that this may be ignored. The form must be retained as it is present and is to be read *mā*. The second letter in the word is read as pure consonant *r*. But as pure consonants are marked with dots (*pullis*) in this epigraph and no dot is present in this letter, it is to be read as *ra* with the medial *a*. The third letter is *nai* and not *rai*. The form *rai* has a slightly different form as could be seen from copper plate[1] charters of the Pandyas. Thus the word will have to be read as *mā ra nai* (*m ba tu*). The revised reading of this line is *Kōc Cēndan Māṛan aimpatu* (கோச் சேந்தன் மாறனைம்பது).

The first part of the epigraph lists the exploits of the king in whose reign the record was issued. Of the exploits of the king, the following deserve special notice. The king is said to have established many *agrahāras*, and performed *mahādānas* like *hiranyagarbha*, *tulābhāra* and *gōsahasra*. He is also said to have established Mangalapura as a *nagara*. Sri Krishnan has taken these exploits as those of Cēndan. But according to the revised reading the epithets are that of Māṛan.

From Copper plates[1] of the Pandyas, like the Velvikkudi, and smaller Sinnamanur plates we find that Cēndan's son was a great ruler, who performed many *hiranyagarbha* and *tulābhāra* ceremonies. The performances of *hiranyagarbha* and *tulaābhāra* are invariably attributed to Māran in all the copper plates and not to Cēndan. This revised reading confirms the information gleaned from copper plates.

Māṛan, the son of Cēndan had many significant titles such as *Arikesari*.[2] The epigraph under discussion, refers to a *madagu* (sluice) constructed in the Vaigai river, which was named *Arikesari*, after one of his oun titles. This is a further confirmation that the ruler was Māran.

From the above it is evident that the ruler is identical with Arikesari, Parānkusa, Māravarman, the son of Cēndan. The Vaigai bed epigraph makes it clear that Māravarman ruled for fifty years. His rule is to be placed between 650-700 A.D. Three powerful predecessors, Kaḍuṅgōn, Māravarman Avanisūlāmani and Cēndan, have occupied the Pandya throne before him. We may assign an average of 30 years to each and place the beginning of the first Pandya empire about 560 A.D. Kōccaḍayan Ranadhīran, Māravarman Rājasimhan and Parāntaka

---

1. *Ten Pandya Copper Plates*. Madras.
2. K. A. Nilakanta Sastri, *The Pandyan Kingdom*, pp. 49-51.

Varaguna, ascended the throne in succession, after Arikesari Māravarman. With the help of Kali era mentioned in Varaguna's epigraph it has been established that he accended the throne in 768 A.D.[1] Kōccaḍayan Ranadhīra and Māravarman Rājasimha ruled for about 65 years after Arikesari. Thus Arikesari's rule is to be placed between 650-700 A.D.

## PANDYAN EMPIRE
### GENEALOGICAL SCHEME

| Name of the Kings | K. A. Nilakanta Sastri in his S. Indian History | Now being Revised |
|---|---|---|
| Kodungon | 590—620 A.D. | 560—590 |
| Maravarman Avanisulamani | 620—645 | 590—620 |
| Cendan | 645—670 | 620—650 |
| **Arikesari Parankusa Maravarman** | **670—700** | **650—700** |
| Koccadaiyan Ranadhiran | 700—730 | 700—730 |
| Maravarman Rajasimhan | 730—765 | 730—768 |
| Parantaka Nedunjadaiyan (Varagunan I) | 765—815 | 768 815 |
| Srimara Srivallabha | 815—862 | 815—862 |
| Varaguna II | 862 | 862 |

This brings us to an important factor. Siruttondar the saint whom Jnanasambandar met at Thiruchengattankudi, is identified with the commander of Mamalla Narasimha (630-668) in his Vatapi wars. Jnanasambandar should have lived between 640 and 655 A.D. The Pandya ruler whom Sambandar converted from Jainism to Saiva faith was a certain Nedumāṛan also known as Kūn Pandya. Traditional literature[2] ascribe to him a great victory at Nelveli and this earned him the title *Nelveli venra Neḍumāran* i. e. Neḍumāra the victor of Nelveli. It is evident that the monarch who was ruling at the time of Sambandar's visit to Madurai was none other than Māṛan, the son of Cēndan, of the Vaigai bed epigraph.

I have pointed out elsewhere, that this Neḍumāṛan is identical with the hero of the Tamil literary work Pandikkovai[3] which also enumarates all these exploits. His titles as Arikesari Parānkusa, and

1. K. A. Nilakanta Sastri, *A History of South India* 1966, pp. 156.
2. *Periya Puranam* by Sekkilar. Ninra Sir Nedumaran Puranam
3. R Nagaswamy: 'Pandya Arikesari and Pandikkovai', K. A. Nilakanta Sastri Felicitation Volume pp. 108-111

Neḍumāṛa, his conquest of Nelveli, and the performance of *hiranyagarbha* and *tulābhara* are listed in Pandikkovai. Thus the author of the Vaigai-bed epigraph is identical with the hero of the Tamil work Pandikkovai.

This epigraph mentions that Cēndan Māṛan established Mangalapura as a nagara. On this Sri Krishnan has made two suggestions. 1) The Mangalapura established by this ruler should be in Pandya territory and is likely to be Mangalam near Sattur. This suggestion, can be finally settled after the present village is examined for its antiquity and 2) Sri Krishnan identifies this Mangalapura with Mangalapura, conquered by Koccadaiyan Ranadhira, the son and successor of Arikesari.

The Velvikkudi grant states that Koccaḍaiyan Ranadhīra the son of Arikesari Māravarman attacked the Mahārathas at Mangalapura and won a decissive victory. This Mangalapura has been identified with Mangalore in the west coast by Professor K. A. Neelakanta Sastri.[1] Dr. K. V. Ramesh in his recent book on History of South Kanara has pointed out, that Alupas who were holding sway over Mangalore and who were aided by the Chalukyan forces faced this invasion at Mangalore.

On the other hand Krishnan is of the opinion that the Pandyas did not invade Mangalore in the west coast, but were defending their own city of Mangalapura near Sattur against the invasion of the Chalukya forces in 674 A.D. The identity of Mangalapura, captured by Ranadhīra with Mangalapura established by Cēndan Māran is not acceptable for the following reasons. The Chalukyas never penetrated so far south as Sattur taluk of Ramnad District and to say that the Pandya, waged a battle in Sattur Taluk against the Chalukya and boasted of its victory is not acceptable. The battle of Mangalapura in which Ranadhīra distinguished himself, is identified with the invasion of Chalukya Vikramaditya in 674 A.D. by Krishnan. We have shown that the Vaigai bed inscription is a record of Cēndan Māṛan, who ruled for 50 years. His rule should have extended upto 700 A.D. Even if we allow some period of joint rule, Ranadhīra's conquest of Mangalpura cannot be placed before 700 A.D. Vikramaditya's expedition, being decidedly a quarter of a century earlier, had nothing to do with Ranadhīra's conquest.

In view of the fact that the Alupas of west coast ruling around Mangalore, claimed Pandya lineage, it is evident that Ranadhīra's conquest related to the capture of Mangalore, which left a permanent mark on the ruling dynasty there.

---

1. The Pandyan Kingdom.

**Dates of Saiva Saints**

This brings us to an important field of enquiry, namely the date of some of the Ālvārs and Nāyanmārs. Before proceeding to examine this question in the light of new findings, it is necessary to notice a recent work on this subject. Sri K. R. Srinivasan and following him K. R. Venkatrama Iyer in their lattest publication, '*Dēvi Kāmākshi in Kanchi*', have discussed the dates of Appar and Sambandar in detail. In this work Appar's date of birth is taken as 665 A.D. and is not considered a contemporary of Mahendravarman. Sambandar's date of birth is assigned to the close of 7th Century, that is about 700 A.D.

A careful study of the above work shows that the views of the above authors are self contradictory and untenable. The following are the few.

1) No mention is made of Trichirappalli inscription of Mahendravarman, which is an important source for dating the Saivite saint Appar.

2) It is stated that Tilakavatiyār the sister of Appar was bethrothed to Kaliyanār (p. 65). This is wrong. Kaliyanār was a different saint who lived in Thiruvorriyur and was an oil merchant. Tilakavatiyār was bethrothed to Kalippagaiyār.

3) It is stated that Kaliyanār was ordered to the front to fight against the invading northerners the Chalukyas. There is no evidence to show that the northerners mentioned in Periyapuranam, were Chalukyas. They could be anybody. The dates assigned to the Nāyanārs are solely based on this assumption.

4) Three different dates are given to Appar in the same book. In page 66, his date of birth is given as 665 A.D.; in page 70, the beginning of Appar's period is given as 660 A.D. and again in page 74, it is given as 650 A.D.

5) Regarding the age of Sambandar it has been said that he was born at the close of 7th Century, about the time when Narasimha II, ascended the Pallava throne (700-728) and lived upto the middle of Nandivarman Pallavamalla's reign. If Sambandar was born in C. 700 A. D., he would have died in 716 A.D. in the reign of Rājasimha himself. The middle of Nandi's reign would be 765 A.D., which would mean Sambandar lived for more than 65 years. Unless such a long life is given to Sambandar, for which there is no evidence, it is difficult to sustain this date.

6) It has been stated that when Appar met Sambandar at Sirkali, soon after later's *upanayana*, he was sufficiently advanced in age. According to the same book, Appar's date of birth is 665 and that of Sambandar is C. 700 A.D. Sambandar's upanayanam was then performed in his 8th year, in 708 A.D. In that year Appar would be about 43 years of age which is certainly not an old age.

7) It has been stated that Sambandar converted the Pandya ruler Neḍumāran to Saivism, and he is identified with Māravarman Rājasimha, the father of Neḍunjaḍaiyan. This synchronism is also not possible according to the authors own stand, for he assigns Rājasimha to C. 730-768 A. D. According to him, Sambandar was born in 700 A. D. If Sambandar lived for only 16 years. he could not have converted the ruler who came to the throne in 730 A.D.

The inconsistencies have cropped up because the contemporary of Sambandar is taken to be Māravarman Rājasimha. In the light of this new inscription of Cēndan Māran, the views expressed by K. R. Srinivasan needs revision.

The Periyapurana of Sekkilar and the Guruparampara are all Puranas, which take one or two episodes from the life of the saints and weave beautiful myths around them. We must therefore be careful in utilising them for reconstructing history. Episodes corroborated by epigraphical or archaeological source alone should be taken into account and the rest left out to the realm of religious faith.

*Date of Appar*

One episode that needs examination is the conversion of the Pallava contemporary of Appar, from Jainism to Saivism. It must be seen whether there is any evidence to support this. All scholars assign Appar to the 7th Century, though some would assign him to the first half of 7th Century. and others to the second half. Mahendra I, Narasimha I, Mahēndra II, Paramesvara I, and probably Rājasimha were the Pallava rulers of the 7th Century A.D. We do have an epigraphical reference to conversion of a Pallava in 7th Century A.D., and this occurs in the Mahendra's inscription at Tiruchirappalli in which Mahēndra states that he changed to the Saiva faith from some other faith. No other Pallava of 7th Century was a convert. Thus the tradition is corroborated by epigraphical evidence and should thus be considered an indisputable evidence testifying to the contemporaneity of Appar with Mahēndra I. Recent discoveries have shown that Mahendra ruled for 40 years (590-630). So Appar may be assigned to Circa 580-660 A.D.[11]

*Date of Sambandar*

Appar and Jnānasambandar were contemporaries according to all accounts. Jnānasambandar is said to have converted the Pandya ruler *Ninrasīr Nedumāran to Saivism from Jaina faith.* Literature refers to Nedumāran as the victor of Nelveli. From the Velvikkudi & Sinnamanur copper plates we do get a Pandya Māran in 7th Century who is praised for his victory at Nelveli.

Some scholars identify him with Māran, the son of Cēndan while others identify him with Māravarman Rājasimha I, the son of Ranadhīra.

It is therefore necessary to discuss this problem in detail. Scholars like K. V. S. Ayyar, T. V. Sadasivapandarathar and M. Raghava Iyengar have given the titles Arikēsari and Parānkusa to Rājasimha I, without any evidence as a result of which some scholars like K. R. Venkatrama Iyer and K. R. Srinivasan try to hold that Jnānasambandar was a contemporary of Pandya Rājasimha I. None of the copper plates of the Pāndya give the titles Arikēsari or Parānkusa to Rājasimha. On the contrary only one ruler Māran, son of Cēndan is given these titles. Some scholars assign even the conquest of Nelveli to Rājasimha I., but there is absolutely no evidence for this. As far as copper plates and literature are concerned the conquest of Nelveli is ascribed only to Māravarman, son of Cēndan. We list below the exploits of the Pandya rulers as given in copper plates.

The Vaigai bed inscription proves that Cēndan Māran ruled for 50 years and is to be assigned to circa 650–700 A.D. He was the only Nedumāran, the victor of Nelveli, who was a contemporary of Sambandar. Sambandar's date then would be circa, 640–656 This also shows that Siruttondar was a commander under Pallava Narasimha I and participated in his Vatapi conquest.

*Date of Periyalvar*

Among the Vaishnavite Ālvārs, Periyālvar refers in his verse to Pāndya Ko-Nedumāran.

> கொன்னவில் கூர்வேற் கோன் நெடுமாறன்
> தென் கூடற் கோன்
> தென்னவன் கொண்டாடும்
> தென் திருமாலிருஞ் சோலையே

That Periyālvār was a contemporary of Nedumāran is thus established. Prof. K. A. Nilakanta Sastri says that "all that we can infer is that if this Nedumāran is the same as the contemporary of Jnānasambandar, this Ālvār may also be assigned to their age and likewise

his daughter Āndāl. It seems more likely that the reference is to Srīmāra Srīvallabha". Srīmāra Srīvallabha is assigned to Circa 816-862. According to Guruparampara, Periyāḷvār was a contemporary of Srīvallabha and this probably influenced the learned Professor to prefer the later date.

T. A. Gopinatha Rao in his 'History of the Sri Vaishnavas,' has suggested that Periyāḷvār was a contemporary of Srīmāra Srīvallaba, identical with Srīvallabha Avanīpasekhara of Sittannavasal inscription. Mr. Rao's conclusion is based on the identity of the name Srīvallabha, said to be a contemporary of Periyāḷvār according to Guparampara.

M. Raghava Iyengar in his 'Age of the Ālvārs' differed from Gopinatha Rao and held that the contemporary of Periyāḷvār was Māravarman Rājasimha father of Parānṭaka Neḍunjaḍaiyan. Parānṭaka Neḍunjaḍaiyan was a Parama Vaishnava, who erected a Vishnu temple at Kanchivay Perūr. Raghava Iyengar held that Parānṭaka derived his Vishnubhakti from his father Māravarman Rājasimha and that Rājasimha should have been converted to Vaishnavism by Periyāḷvār.

While discussing the date of Periyāḷvār two points deserve to be carefully noted. (1) The saint himself refers to a Pandya Kō-Neḍumāran as his contemporary. (2) The Guruparampara refers to a Pandya Srī vallabha as his contemporary. We must look for a Pandya who had both these titles. Sri Māra, the son of Parānṭaka Neḍunjaḍaiyan is called in the larger Sinnamanur and Dalavaypuram copper plates as Srīvallabha. Srīvallabha seems to have been his *abishekanāma*, but whether he had the title Kō-Neḍumāra was not proved so far by any epigraph.

An epigraph coming from Erukkangudi, Sattur taluk, Ramnad District, published recently throws valuable light on the problem. It refers to Pandya Srīvallabha who conquered the places from Kunnur to Ceylon. The point of interest in this epigraph is that this Srīvallabha is also called Kō-Neḍumāran.

" அந்தரத்திரேடியங்குஞ் சந்திராதித்தர் வழித் தோன்றி ஈண்டிய பெருந்
தெய்வதிறல் பாண்டியர் பலர் கழிந்த பின்னை மற்றவர் தங்குலம் விளங்க வந்து
தோன்றி மண் காத்துக் குன்னூர் முதல் சிங்களம் வரை கூடாத வயமன்னரை
விண்ணூர்ப் புக வெகுண்டு வென்றிகளேய் பல விளைத்த தென்னவர்
கோநெடுமாறன் செந்தனிக்கோல் சிரீவல்லவன்." 44 SII XIV

According to Sinnamanur and Dalavaypuram plates, Srīmāra Srīvallabha, the son of Parānṭaka Varaguna I, won significant victories at Kunnur, Vilinjam, Kumbakonam and Ceylon. The Erukkangudi,

inscription is evidently that of Srimara Srīvallabha, the son of Parāntaka Varaguna, and that he had also the title Ko-Neḍumāran.

There can hardly be any doubt that Periyālvār was a contemporary of this Ko-Neḍumāran Srīvallabha and should have florished in the 9th Century A.D. On the other hand no epigraph has so far been found which gives either the title Srivallabha or Ko-Neḍumāran to Rājasimha, whom Raghava Iyengar holds as the contemporary of Periyālvār. We therefore agree with T. A. Gopinatha Rao and K. A. N. Sastri, that the contemporary of Periyālvār was Srīmāra Srīvallabha and that the Vaishnavite Saint florished in the 9th century A.D. Āndāl, the daughter of Periyālvār should also be assigned to the same period.

*Date of Thirumangai*

Scholars have discussed the problem of the date of Thirumangai Āḷvār in detail and have arrived at a satisfactory date. The date of this Āḷvār can be fixed with certain amount of accuracy as he refers to his contemporary Pallava ruler Nandi. Thirumangai lists his conquests which are corroborated by copper plates.

Thirumangai sings the battle of Mannai where Pallavamalla is said to have defeated the Pandya. This is also corroborated by another copper plate. In the Udayendram Plates, Nandi's general Udaya Chandra is praised for his victory over the Pandyasena at Mannaikkuḍigrāma. (*Mannaikkuḍigrāme Pāndyasēnām jitavān.*) Udayendram plate was issued in the 21st regnal year of Nandi (752). The Pandya ruler, who opposed Nandi was Māravarman Rājasimha.

Thirumangai also refers to the battle of Karuvur in which the Pallava is said to have won.

உலகுடை மன்னவன் தென்னவனைக்
  கன்னி மாமதில்சூழ் கருவூர் வெருவ
பலபடை சாய வென்றான் பணிந்த
  பரமேச்சுர விண்ணகரமதுவே

A new evidence has come to light regarding the battle of Karuvur which has not yet received due attention. The Dalavaypuram plates mention that Parāntaka Varaguna, defeated the Pallava at Karuvur. காடவனைக் கருவூரில் கால்கலங்க களிறுதைத்த கூடலர் கோன் This gets indirect confirmation from another source. Sivaramangalam plates, refers to Parāntaka's fight with Atiya, at Pugaliyur and Ayirur on the northern bank of the river Kaveri. These places are situated near Karur. The

same charters also state, that Varaguna defeated the Pallava and Keralan, who came to help the Atiya. Evidently the battle of Pugaliyur was followed upto Karur where an indescive battle was fought. Both the Pallava and the Pandya claim victory at Karuvur. Whatever the result of the war may be, one thing is certain, that Thirumangai who sings this battle, was a contemporary of Nandivarman Pallavamalla and Parāntaka Neḍunjaḍaiyan.

Thus Thirumangai was a contemporary of two Pandya rulers Rājasimha I and Neḍunjaḍaiyan. On the Pallava side, he was a contemporary of Nandi Varman Pallavamalla. (731–796).

It must be mentioned that this Vaishnava Āḷvār, sings in one of his verse, Vairamēgha who is generally identified with Dantivarma Pallava, who ruled in the first half of 9th Century A.D. Thirumangai is therefore taken to be a contemporary of Danti as well. But we have shown elsewhere that the title Vairamēgha was a title of Nandivarman himself. As such we may assign Thirumangai to the reign of Nandivarman. Thus Thirumangai's date may be taken as 730-800 A.D.

*Date of Nammāḷvār*

Almost, to the same period must be assigned Nammāḷvār. Nammāḷvār sings Varagunamangai, and Srivaramangalam, both places established by Parāntaka Neḍunjaḍaiyan. Madhurakavi is said to be a desciple of Nammāḷvār. A Madhura Kavi occurs as a minister of Parāntaka I during the early years of his reign, as seen from the Anamalai epigraph. Madhura Kavi was dead at the time of Anamalai inscription. As such Nammāḷvār's end could be placed about 780 A.D. His date of birth would be circa 700 A.D. Nammāḷvār had two other names which are significant. He was called Parānkusa and Māran. In all probability the names Parānkusa and Māran were derived after Arikēsari Parānkusa Māravarman of the Vaigai bed-epigraph. Vaishnavite tradition makes Thirumangai and Nammāḷvār contemporaries. Our studies also seem to point to the same direction. While the Guruparampara, makes Periyalvār also a contemporary of Thirumangai and Nammalvār, our studies show that Periyalvār lived in the 9th century A.D.

The Vaigai bed inscription of Cēndan Māran has opened up new avenues of enquiry relating to the chronology of the early Pandyas and the history of Saivism and Vaishnavism in South India.

As a result of the above study the following are our conclusions:-

1) The Vaigai bed inscription is that of Cendan Maran who ruled atleast for 50 years (650-700 A.D.).

2) He was the hero of the Tamil work Pandikkovai.

3) The chronology of the early Pandyas could be satisfactorily settled and the beginning is to be placed about 560 A.D.

4) The city of Mangalapura established by Arikesari was located in the Pandya country.

5) But the Mangalapura where his son defeated the Maharatas is identical with Mangalore.

6) Appar was a contemporary of Mahendra, Mamalla and the Pandya Arikesari.

7) Appar's date would be circa 580-660 A.D.

8) Jnanasambandar was a contemporary of Mamalla I, and Pandya Arikesari Nedumaran.

9) Sambandar's date would be 640-656 A.D.

10) Thirumangai was a contemporary of Rajasimha and Nedunjadaiyan of the Pandyas and Nandivarman Pallavamalla and may be assigned between 730 and 800.

11) Nammalvar's date would be about 700 to 780 A.D.

12) Periyalvar was a contemporary of Sri Mara Srivallabha and his date would be Circa 800-885.

13) Andal is to be assigned to the 2nd half of 9th Century.

14) The Vaigai bed inscription is an important landmark in the history of Tamilnadu.

# பண்டைய தமிழகத்தில் அரச ஒப்பந்தங்கள்

## எழுத்தில் வடிக்கப்பட்டனவா?

தற்காலத்தில் இருநாடுகளுக்கிடையே ஒப்பந்தங்கள் ஏற்படும் போது அவை ஷரத்து வாரியாக எழுதப்பட்டு, இறுதியில் பங்கு பெறும் இருநாடுகளின் பிரதிநிதிகளும் கையொப்பமிடுகின்றனர். இது எழுத்தில் வடிக்கப் பட்ட ஒப்பந்த (Written document) மாகத் திகழும். இது போல் இரு நாடுகளுக்கிடையே எழுத்தில் இடப்படும் ஒப்பந்தங்கள் பண்டைய தமிழகத்தில் உண்டா? எனில் உண்டு. 13-ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டு அதற்குச் சான்று கூறுகிறது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்பவன் 13-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஆண்டவன். அவன் சோழப் பேரரசனை வென்ருன். தோற்ற சோழன் மாறவர்மனின் அரியணையின் கீழ் வீழ்ந்து வணங்கினான். அவ்வாறு வணங்கிய சோழ மன்னனை பாண்டியன் மிகவும் பெருந்தன்மையுடன் நடத்தினான். அவனது முடியையும் மாளிகையையும் மீண்டும் அவனுக்கே திருப்பி அளித்ததற்கு ஒரு திருமுகம், எழுத் தோலை, அளித்தான். அத்திருமுகத்தில் தனது அரச முத்திரையான இரு மீன்களையும் பொறித்தான். "இதையே பிடிபாடாகக் கொண்டு நீ உன் நாட்டை மீண்டும் சென்று ஆளவும்" என எழுத்து மூலம் சோழனுக்கு கொடுத்தான். அதை சுந்தரபாண்டியனது மெய்கீர்த்தி பின்வருமாறு கூறுகிறது.

"மானநிலை குலைய வாழ்நகரிக் கப்புறத்துப்
போன வளவ னுரிமை யொடும்புகுந்து
பெற்ற புதல்வனை நின் பேரென்று முன்காட்டி
வெற்றி யரியணைக்கீழ் வீழ்ந்து தொழுதிரப்பத்
தானேடி முன்னிகழ்ந்த தண்மையெலாங் கையகலத்
தானே தகம்பண்ணித் தண்டார் முடியுடனே
விட்ட புகலிடந்தன் மாளிகைக் குத்திரிய
விட்டபடிக் கென்று மிதுபிடிபா டாகவெனப்
பொங்குதிரை ஞாலத்துப் பூபாலர் தோள்விளங்குஞ்
செங்கயல் கொண்டுன்றுந் திருமுகமும் பண்டிழந்த
சோளபதி யென்று நாமமுந் தொன்னகரும்
மீள வழங்கி விடைகொடுத்து விட்டருளி"

இதிலிருந்து 13-ஆம் நூற்றுண்டிலேயே இரு அரசுக்குள் ஏற்பட்ட முடிவுகள் ஏடுபடுத்தப்பட்டன (reduced to writing) என்று தெளிவாக அறியலாம்.

— ஆசிரியர்

## சிவந்தெழுந்த பல்லவராயன் உலா (சென்ற இதழ் தொடர்ச்சி)

.............................................துய்யமணி
மேடைக்கே வீற்றிருப்ப வேழத்தே ரன்றிமணி
மாடத்தே வீதியினில் வந்தணைந்தார்-கூடற்கோன் 522
பிள்ளைப் பெருமாள் பெரியபெரு மாள்தந்த
வள்ளற் பெருமாள் வயற்பெருமாள்-தெள்ளுதமிழ் 523
தேடும் பெருமாள் சிலைப்பெருமாள் ஒண்ணலரை
சாடும் பெருமாள் தமிழ்ப்பெருமாள்-கூடலு 524
கந்த பெருமா ளுலகுபுகழ் சேர்மல்லைசி
வந்த பெருமாள்முன் சென்றுள்க-விழ்ந்ததலைக் 525
கொட்டிச் சிலைப்புருவம் பூட்டிக் குனிந்தமுகம்
காட்டித் தனிநின்று கைதொழுதாள்-மோட்டுவயற் 526
சேனை நடுவே செகவேந்தர் தம்முடனே
தானும் மகராசன் சந்ததிதான்-பானல் 527
எடுத்தான் திரும்பவுமங் கேதுக்கோ தாணி
மடுத்தா னிதழை மடித்தான்-கடித்தான்பல் 528
தாலிக் கரும்புத் தனுவளைத்து பூங்குயிலைக்
கூவித் தொடைதட்டிக் கொக்கரித்தான்-பாவியவள் 529
யென்செய்தா ளோயறியேம் யின்பரச வல்லிமுலை
பொன்செய்தாள் மேனியெல்லாம் புண்செய்தான்-பின்பவனை 530
ஏன்செய்தாய் என்றுசொல்லா ரில்லாம னின்றுபோ
தான்செய்தான் நம்செய்தா ளுர்மதத்தின்-மீன்செய்த 531
கன்னி மயலை கரைகண்டு கைவிரலால்
எண்ணி யுரைப்பா ரெவரேயோ-பெண்மதியை 532
பார்க்குங் கொதிக்கும் பதைபதைக்கு மங்கமெலாம்
வேர்க்கும் விதிர்விதிர்க்கும் வெய்துயிர்க்கும்-ஆர்க்கும் 533
அடங்காத மால்படைத்தா ரத்தனையே வெய்தும்
தடங்காவித் தண்ணீர் ததும்பு-மடங்காது 534
தோழிமேற் சாய்ந்துநின்ற தோகையருந் தாதியரும்
ஆழியின்மேற் கண்துயிலு மச்சுதா-வாழி 535
சிவந்தபெருமாளே செந்தமிழோர் பாடல்
வுவந்த பெருமாளே உத்தார்-நிவந்துலகில் 536
செங்கோல் செலுத்தும் செயதுங்கா யெம்மளவில்
வெங்கோல் செலுத்தியிட வேண்டிற்றே-யெங்கோவே 537
வன்குடைக்கீ ழாற்றாத மன்பதையெல் லாமையா
வுன்குடைக்கீ ழன்றோ ஒதுங்குவார்-புன்கரத்தால் 538
ஊறுநா டாவகையுள் ஒரஞ்சு நாடுமிளைப்
பாறுநா டன்றோ அகளங்கா-சிறுவ் 539
யெங்கே யிடமென் றிரக்கமுஞ்சற் றெண்ணுமல்
அங்கே பராமுகமொன் றுகாவே-தூங்க 540
வேழந் தனிநடப்ப வெற்பைப் பொலங்கொடிகள்
சூழும் படிமடவார் சூழ்ந்துகொண்டே-வாழுமெங்கள் 541
பல்லவ னின்சொல்லும் பண்பும் படைத்திடினும்
கல்லவன் னெஞ்சு கடிதென்பார்-மல்லையர்கோன் 542
மின்னலைய வற்கின்னம் வேரன்று (யீதெங்கள்)
முன்னை வினையின் முடிவென்பார்-தன்னை 543

எழுதியகோல் கையில் இருக்கவுஞ்சற் றெண்ணுள்
வழுதியர்கோன் வன்கண்ண னென்பான்-தொழுதியர்கள் 544
மெச்சிகோ ருடனெனும் மிக்கவிரு துண்டானுல்
கச்சியர்கோன் செங்கோல் கடிதென்பார்-நச்சியீது 545
கேளியான் சொல்வதுதார் கேட்டுந்தா ராதிருந்தாற்
கோளியா னென்பதென்ன கொள்கையென்பார்-மீளியா 546
யாதி யுகம்போல் யவனிபுரந் தாளிலதில்
பாதி கலியுகமோ பாருமென்பார்-வீதியினில் 547
நில்லையா யென்று நிறுத்தோமோ தீதெமக்கு
மல்லையான் மீதோர் வழக்கன்றே-பல்லவர் 548
பண்பிழி யாது பரிகரியா தேநடந்தால்
பெண்பழி யாதும் பெரிதென்பார்-தண்பனிநீர் 549
குட்டங் குடியாது கொண்மதியை நோக்காது
கட்டங்கு மாலேதனைக் காணுது-மட்டங்காற் 550
தென்ற லவள்பழிக்குத் திட்டி திறவாது
மன்ற றவள்பொழிலில் வைகாது--சென்றிவளை 551
யெத்தனைநா ளென்றுயரிந் தீடேற்று வோம்விரகம்
அத்தனை நாளுனு ளல்லவோ-இத்தனைநாள் 552
சென்று பவனிதொழ சேவித்தாற் குற்றபயன்
யென்றங் கனைவோரும் யேசறவாய்-நன்றுவிரல் 553
கோடாத செங்கோல் குளிர்வெண் குடைகாட்டி
ஆடா மணிநா அசைந்திட்டு-நாடா 554
வரகரியைப் பேரிளம்பெண் வஞ்சிக் களித்து
புரவலனுக் கோர்வணக்கம் போக்கி-தெரிவைதனை 555
அந்தளகத் தேற்றி யணிமருகு தீந்ததற்பின்
கொந்தளக வல்லியொரு கொம்பனையாள்-இந்துநுதல் 556

## பேரிளம்பெண்

சிந்தா மணிகுலிச தேவனுக்கோ ராயிரங்கண்
தந்தா ளனைய தகையினுள்-கொந்தாரும் 557
வண்டோ தரியை வனப்பழிப்பாள் ஐவர்தமை
கொண்டோர்நாள் நூற்றுவரைக் கொண்டழிப்பாள்-பண்டோர் 558
தவமுனிவன் சாபமிடசஞ்சரித்த பெண்மான்
நவசரச யோக நளினம்-சிவனெனனும் 559
மன்ற முடையார் மருவுஞ் செருந்திவன (குடுமியாமலை)
குன்றம் வளரும் குலச்சந்தம்-மன்றிலசை 560
காத்த கரும்பனைய கள்ளும் வரல்விளைந்து
பூத்த கரும்பனைய பொற்பினுள்-கூத்தயரும் 561
ஆட்டத்தை யாடரியா அன்னு ளிளந்தோகைக்
கூட்டத்தை யாட்டுவிக்கும் கோலமயில்-பூட்டு 562
மிரும்பிடி மால்யானை யேறிப் படியும்
பெரும்பிடி யென்ன நடைப் பேர்வாள்-பொரும்படையில் 563
கொண்ட றவழ்தடுமி கோக்கருணை மாமலையார்
உண்ட விடம்போ லுள்ளொடுங்கி-மண்டலத்தின் 564

பொய்தடிந்த தேவிதனை போர்வேற் களச்சிங்கன்
கைதடிந்த வாள் போலுங்கண் ணினாள்-பைதடிந்து 565
சென்றதே வீதியாய்ச் செய்தபின்பு தான்நிலைக்கு
நின்றதே ரன்ன நிதம்பத்தாள்-கன்ற 566
யெழுந்தண் டவஞ்செய்ய மீதண்ட வாழைக்
கொழுந்தண் டனைய குறங்காள்-யெழுந்தனங்கள் 567
வெங்கோ விடுங்கால் விசைபெற்றோ மென்றளிகள்
அங்கோ விடுங்கார் அளகத்தாள்-தங்காது 568
தத்தும் புரவிச் சமர்க்களத்தில் வீழ்ந்தூன்றிக்
குத்தும் மதகரியுங் கூர்ங்கோடு-யித்தகுலை 569
ஏராகச் சாய்ந்த இளநீரும் பூமகட்குப்
போரானை யாட்டுமிரு பொற்குடமும்—நேராரென் 570
பாட்டென்று பல்லவர்க்குப் பாண்டியனார் மாமகுடம்
சூட்டும் பொழுது சொரிமகுடஞ்-சூட்டத் 571
திடமகுட மன்னர் சிரத்தோடுஞ் சாய்ந்த
தடமகுட மன்ன தனத்தாள்-குடமுலைகள் 572
கண்டுகிலே சப்பட்டு காண்பரிய சிற்றிடைக்கு
வெண்டுகிலே செம்பட்டு வேண்டிலாள்-பெண்டிறத்தாள் 573
முற்றவஞ்செய் வார்க்கு முழுது முணர்ந்திடலால்
நற்றவஞ்செய் வார்க்கு நடுநின்றான்-கற்ற 574
செவிநயமுங் கல்விச் சிவந்தபெரு மாள்மேல்
கவிநயமுங் கண்டுகளிப்பாள்-அவிநயனூற் 575
பாட்டுக் குரையெழுதும் பல்லவன்பொற் காமகலை
யேட்டுக் குரைநூ லெழுதுவாள்-வேட்டன்பால் 576
வண்டார் வரகுணன்போல் மல்லையர்கோன் தாதகியை
கண்டாலும் வேம்புதனைக் கைதொழுவா-ளுண்டான 577
கைக்குவளை மைக்குவளை கண்ணுக் கிடாள்சிவந்தான்
மெய்க்குவளைத் துக்காண வெஞ்சத்தா-திக்குவளை 578
மாரன் கனக வசந்தத் திருநாளில்
சேரு மிளந்தென்றற் கேர்நடப்ப-காரளக 579
வண்டு நிரைத்தமணித் தேரான் நெருங்கிடக்
கண்ட யிளைஞோர்கள் கண்களிப்பக்—கொண்ட 580
குழைதோய் மகரக் கொடிதுடங்கி மின்ன
மழைதோய் மலர்ப்போதம் பாவை—கழைதோயும் 581
காமன் திருவிழாக் கண்டிருந்து பல்லவர்க்கு
மாமன் வரவிட்ட வண்டமிழோர் தாமங்கு 582
கூடியிருந்தளவித் கோழியர்கோன் மேற்புலவோர்
பாடிய கோவைப் பழந்தமிழும்-தேடியசொற் 583
பிள்ளைத் தமிழும் பெரும்பரணித் தாழிசையும்
வெள்ளைத் தமிழ்வஞ்சி வெண்கலியும்-வள்ளைப் 584
புறமும் கலம்பகமும் பொன்னூசற் பாட்டும்
மறமும் குறமும் வகுத்துத்-துறை...ிந்து 585
பின்னுமொரு மாடம் பெயர்த்தேறிக் குன்றுசர
மின்னுமணி யாயிரக்கால் மண்டபமும்-துன்னும் 586

கொடிக்கோ புரமும் கொடிமதிலும் தேரும்
கடிக்கோ மறுகுமலர்க் காவும்-படிக்கோ 587
கருணை மலையார் கனசிகரக் கோட்டு
கிரணமதுட் செம்பொற் கிரீடத்-தருணமணி 588
தண்பரவு திண்பார சங்கிலி மண்டபமும்
கண்பரவக் கண்டேக வல்லோர்-பெண்பாவாய் 589
அத்தனையும் செய்தமைத்தோ ராரென்னப் பேரிளம்பெண்
முத்தனைய மூரல் முருககலா-வித்தரித்து 590
பல்லவராய் முன்பிருந்து பாராண்ட மன்னவர்கள்
யெல்லவர்பண் பெல்லா மெடுத்துரைத்து-மல்லைவரு 591
மாலென்னு மச்சுதன்சேய் மல்லப்ப னுக்கிளைய
பாலன் சிவந்தெழுந்த பல்லவனும்-மேலைநாள் 592
மொய்தவத்தாற் செய்ததெல்லாம் முன்புணர்த்திப் பின்பிருந்தோர்
செய்தன வெல்லாம் தெரிந்துரைத்துக்-கைதவன்போற் 593
பேராள னெங்கள் பெரியபெரு மாள்மதலை
பாராள் சிவந்தெழுந்த பல்லவர்கோன்-காராளன் 594
சித்தமுறைச் செய்த திருப்பணியே யாதியாய்
யெத்தனையும் வெவ்வே றெடுத்துரைத்தான்-அத்துணையில் 595
கோதண்ட வோசை குழலோசை கொல்லார
வேதண்ட வோசைமத வெற்போசை-ஆதொண்டை 596
மன்னர் தமைவென்ற மல்லாரி ஓசைதமிழ்
தென்னர் வரவிட்ட தேரோசை-துன்னு 597
துரங்கத்தி னோசைதமிழ்ச் சொல்லோசை யெல்லாம்
தரங்கத்தி னோசை தடுப்ப-அரங்கத்து 598
மாயன் துயிலெழுந்து வந்தா லெனப்புலவோர்
நேயன் குமணன் நிருபதுங்கன்-தூய 599
வரதுங்க மாமனெங்கள் மல்லையர்கோ மானை
சுரதுங்க யானையின்மேல் கண்டாள்-சுரதங்கொள் 600
எண்புள்ளு நோக்கா ளிசைநோக்காள் பேரறப்
பண்புள்ளு நோக்காள் பணிநோக்காள்-வன்புள்ளும் 601
பச்சைப் பொறிப்புள்ளு நோக்காள் பசப்புள்ளு
மிச்சப் பசுப்புள்ளு மின்னுளாய்க்-கச்சிவரு 602
பொன்னெடுந் தோளான் புயத்தழகு மொண்டுகொள்ள
மின்னெடுஞ் சென்றதிரு மேகமேமாற்-தன்னடைக்கி 603
வேழமான் தூங்க விழிக்குப் புறங்கொடுத்துப்
மோழைமான் பின்செல்ல முன்சென்றாள்-ஏழைமான் 604
முன்பே வளையிழந்த தல்லாமற் முன்னிற்று
பின்பே திழைப்பாள் பெரும்பாவி-அன்பே 605
தலைக்கொண்டு காமநோய் தள்ளத்தள் ளாடி
நிலைக்கொண்டு கண்சொருகி நின்றாள்-மலர்க்கொண்ட 606
தேன்மெழுகு மானாள் தன் சேவடிகள் சந்தனத்தாற்
ஊன்மெழுகித் தான்மெழுகி உள்ளடைந்தாள்-மீனுக்கு 607
தூண்டில் போலுள்ள சுகமனைத்துந் துன்பமாய்
மீண்டில போல் நெஞ்சதனை விட்டெறிந்தாள்-பாண்டில்போம் 608

............தொடர்ச்சி பக்கம் - 32

# வரலாற்றில் செக்கு

S. இராஜகோபால், M.A Dip. in Epgy., & Arch.
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

சுவையான உணவிற்கும், பண்டைய அரசின் நிலையான வருவாய்க்கும் செக்கு பெரும் பணி செய்து வந்திருக்கின்றது. செக்கு பற்றிய கல்வெட்டு, இலக்கிய, நடைமுறைச் செய்திகள் இங்குத் தொகுத்துத் தரப்படுகின்றன.

செக்கு என்பது பொதுவாக எண்ணெய் ஆட்டப்பயன்படும் அமைப்பைக்குறிக்கும். இருப்பினும் சிலபகுதிகளில் மாவாட்டப்பயன்படும் கல்லைச் செக்கு என்று அழைப்பது நோக்கத்தக்கதொன்று. இதனைக் கருத்தில் கொண்டு செக்கு என்பது ஒரு பொருளை நன்கு நைத்துக் கூழாக்கவோ, சாறு பிழியவோ பயன்படும் ஓர் அமைப்பு என்று கருதலாம்.

கற்கால மனிதர்கள் செக்கு அல்லது அதுபோன்றதொரு அமைப்பை அறிந்திருந்தனரா என்பதற்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் அவர்கள் பொருளை நைப்பதற்குக் கைக்கோடரிகளின் (Hand axes) பின்பகுதிகளை உபயோகித்திருக்கின்றனர். கைக்கோடரிகள் கூழாங்கற்களால் ஆகியவை. கையடக்கமானவை. இத்தகைய கைக்கோடரிகள் செங்கல்பட்டு மாவட்டத்தில் அத்திரப்பாக்கம் பகுதியில் கிடைத்துள்ளன. சிந்துவெளி நாகரிக மக்கள் அம்மி-குழவிகளையும் (Saddle and Quarn). கற்திருகைகளையும் (Rolling Miller) அறிந்திருந்தனர். இதற்கான சான்றுகள் 'லோதல்' (Lothal) பகுதியில் கிடைத்துள்ளன.[1] இம்மக்கள் வண்டிகளையும், மட்பாண்டம் செய்வதற்கான சக்கரங்களையும் அறிந்தவர்கள். இவர்கள் செக்கு போன்ற அமைப்புக்களைப் படைத்து உபயோகித்ததற்கான வாய்ப்புக்கள் உள்ளன. சான்றுகள் கிடைத்ததாகத் தெரியவில்லை.

## இலக்கியங்களில்

பண்டையத் தமிழ் இலக்கியங்களில் செக்கு பற்றிய செய்திகள் அதிகமாகக் கிடைக்கவில்லை. சிலப்பதிகாரத்தில் 'ஓசுநர்' என்ற எண்ணெய் வியாபாரிகள் குறிக்கப்படுகின்றனர்[2] திருவாய்மொழியில் செக்கு, ஐம்பொறிகளாகிய நோய்கள் தரும் துன்பத்தை உடைய உடலிற்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளது.[3] திருத்தொண்டர் திருவந்தாதியிலும[4] பெரியபுராணத்திலும்[5] கலியனுர் வரலாற்றைப்பற்றிக் கூறுமிடத்தில் செக்கு குறிப்பிடப்

படுகின்றது. நாலடியாரில்[6] செக்கூர்ந்து கொண்டு வரப்படும் செல்வம் குறிக்கப்படுகின்றது. பிங்கலநிகண்டில்[7] சதயநட்சத்திரத்தின் வேறு பெயராகச் செக்கு குறிப்பிடப்படுகின்றது, காளமேகப்புலவர் பாடிய பாடல்[8] ஒன்றில் செக்கு, இடைக்கு உவமையாகக் கூறப்படுகின்றது. செயங்கொண்டார், செக்கார் மீது பாடிய பாடல் ஒன்றில்[9] செக்கு குறிப்பிடப்படுகின்றது.

### கல்வெட்டுக்களில்

கல்வெட்டுக்களில் செக்குகளைப்பற்றி அறிய முனையும்போது தமிழகத்தில் செக்குகளிலேயே கல்வெட்டுகள் கிடைத்துள்ளமை நமக்கு நல்ல செய்தியாகும். தமிழகத்தில் பலபகுதிகளில் கல்லாலான செக்குகள் காணப்படுகின்றன. இதுவரை ஆறு செக்குகளில் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவையாவன 1. மதுரை மாவட்டம், கருங்காலங்குடி 2. வட ஆர்க்காடு மாவட்டம், மணிக்கல் 3. கொரகலவாடி 4. தர்மபுரி மாவட்டம் அலமேலுபுரம் 5. சின்னப்பட்டி 6. சிக்களூர்.

### கருங்காலங்குடி

இவ்வூரில் கிடைத்த செக்கில் கி. பி. 8-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுள்ளது. அக்கல்வெட்டின் மூலம், வழுதி வள நாட்டு மிழலூரைச் சேர்ந்த அப்பன் என்பவர் உழஞ்சூர் நாட்டு நெல்வேளூரைச் சேர்ந்த பொற்கொடி வீரர் பேரால் இச்செக்கை இட்டார் என்று அறியலாம். இச்செக்கு தற்பொழுது மதுரை திருமலை நாயக்கர் மாளிகையில் உள்ளது.

1. ஸ்ரீ வழுதி வளநாட்டு மிழலூர்
2. அப்பனுழஞ்சூர் நாட்டு நெல்வே
3. ளூர்ப் பொற் கொடிவீரர் பேரால் இ
4. ட்ட செக்கு

### மணிக்கல்[10]

இவ்வூர் வடஆர்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள செக்கில் கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

ஆதணியார் இட்ட செக்கு

### சின்னப்பட்டி[11]

தர்மபுரிமாவட்டத்தில் உள்ள இவ்வூரில் கிடைத்த கல்வெட்டும் கி.பி. 10,11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதலாம். இங்குக் கல்வெட்டு செக்கின் வாயோரத்தில் அமைந்துள்ள விளிம்பில் வட்டமாகத் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. கடைசிப் பகுதி உடைந்துவிட்டது.

ஸ்வஸ்தி ஸ்ரீ விகளசோரன் இராச்சியஞ்
செய்யா நிற்க்க நாகுந்தை அத்த . . . .

**சிக்களூர்**[12]

இவ்வூரும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ளதே. இக்கல்வெட்டு கி. பி. 10, 11-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த தமிழ் எழுத்தில் பொறிக்கப் பட்டுள்ளது. கல்வெட்டு முழுமையாக இல்லை.

. . . . . தூரிருந்து வாழும் . . . . க்கநேந்
இச்செக்கு இடுவிசேன் இதன்கு
ரக்ஷித்தார் பாதம் என்றலே

**அலமேலுபுரம்**[13]

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள இவ்வூரில் கிடைத்த செக்கில் கி.பி. 10, 11-ஆம் நூற்றுண்டுத் தமிழ் கல்வெட்டுள்ளது. கல்வெட்டு வாய்ப்பகுதி யில் வெளியிலிருந்து உள்செல்லும் சுருள் வட்டமாகப் பொறிக்கப்பட்டுள் ளது.

ஸ்வஸ்திஸ்ரீ வியளச்சோர நுளம்பநாற்குறை
இடமாரிமகந் இறையம நிட்ட செக்கு

**கொரகலவாடி**[14]

. . . ஸ்ரீ இச்செக்கு இடுவி . . . . நாயபாடி
. . . .

இச்செக்கில் உள்ள கல்வெட்டு கி.பி. 10, 11-ஆம் நூற்றுண்டுத் தமிழ்க் கல்வெட்டாகும்.

செக்குகளில் உள்ள கல்வெட்டுகளைத் தொகுத்துப் பார்க்கின்ற போது இச்செக்குகள் அனைத்தும் பொது நோக்குடையவர்களால் வழங்கப் பட்டவையாகத் தெரிகின்றன. எல்லா கல்வெட்டுகளிலுமே "இட்ட செக்கு" என்று குறிப்பிடப்படுவது நோக்கத்தக்கதொன்றுகும். எப்படி சமணப்பெரியார்களுக்கு உருவச் சிலைகள் ஏற்படுத்தியவர்கள் கல்வெட்டு களில் 'வச்சதிருமேனி' என்று குறிப்பிடுகின்றார்களோ, எப்படி பெரிய கற்றளிகளைப் படைத்தவர்கள், 'எடுப்பித்த திருக்கற்றளி' என்று குறிக் கின்றார்களோ அப்படியே "இட்ட செக்கு" என்று குறிப்பதும் பழகி வந்த சொற்றொடராகத் தெரிகின்றது.

கருங்காலங்குடிச் செக்கு நெல்வேளூர் வந்த கொடி வீரர் பெயரால் இடப்பட்டுள்ளது. சின்னப்பட்டி, அலமேலுபுரம் ஆகிய தர்மபுரி மாவட்ட ஊர்களில் உள்ள செக்குகள் வியளசோரன் அல்லது விகளசோரன் என்ற

நுளம்ப மன்னனது ஆட்சிக் காலத்தில் இடப்பட்டுள்ளன. தர்மபுரி பகுதியில் 9, 10, 11-ஆம் நூற்றாண்டுகளில் நுளம்ப மன்னர்கள் ஆட்சி புரிந்ததும், இப்பகுதி நுளம்பபாடி என்று அழைக்கப்பட்டதும், தர்மபுரியில் உள்ள கோட்டைக்கோயில் நுளம்ப மன்னர்களால் எழுப்பப்பட்டு நுளம்பர் கலைப் பாணியைப் பறைசாற்றுவதும்[15] இங்கு நோக்கத்தக்கவை.

செக்கிறை

பண்டையத் தமிழக அரசுகளின் வருவாய் வழிகளுள் செக்குகள் ஒரு நல்ல இடம் வகித்து வந்திருக்கின்றன. கல்வெட்டுகளில் செக்கின் மூலம் கிடைத்த வரிவருவாய் 'செக்கு', 'செக்கிறை', 'செக்குக் காணம்', என்று குறிப்பிடப்படுகின்றது. தமிழ் லெக்சிகன் 'செக்கு முட்டை', 'செக்கு மன்றாடி' என்று குறிக்கின்றது.[15A] பல்லவர் கால வரிகளைப் பற்றிக் குறிக்கின்றபோது டாக்டர் மீனாக்ஷி அவர்கள் கீழ்க்கண்ட கருத்தைத் தெரிவிக்கின்றார்கள்.[16] "செக்கு என்று குறிப்பிடப்படுவது பொதுவாகச் செக்கிலிருந்து வெளிப்படும் எண்ணெய் மீது இடப்பட்ட வரியாக இருந்த போதிலும், அது செக்கு யந்திரங்களை நிறுவுவதற்காக அல்லது செக்குகளை இயக்குவதற்காக விதிக்கப்பட்ட உரிமைக் கட்டணமாக (licence fee) இருக்கலாம்". இதிலிருந்து அரசின் அனுமதியின்றி யாரும் செக்கு யந்திரங்களை நிறுவவோ, அல்லது எண்ணெய் ஆட்டவோ இயலாது என்பது தெரியவருகிறது.

முதலாம் பராந்தகசோழனின் 14-வது ஆட்சி ஆண்டில் திருவிடை மருதூர் அருகில் ஐய்யப்பாடி என்றொரு புதிய ஊர் அமைக்கப்பட்டது. இச்செய்தியைக் குறிக்கும் கல்வெட்டு ஊரில் அமையவேண்டிய மாளிகை, மரங்கள், முதலியவற்றைக் குறித்து பிறகு "பெறுஞ்செக்கிடப் பெருவதாக(வும்)"[16A] என்று செக்கு அமைய வேண்டிய செய்தியையும் குறிக்கின்றது. இதன்மூலம் செக்கு அமைக்க அரசின் அனுமதி தேவை என்பதையும், ஓர் ஊருக்கு அவசியமானவற்றில் செக்கும் ஒன்று என்பதையும் நாம் உணரலாம்

பல்லவர் செப்பேடுகளில் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட பிரம்மதேய ஊர்களில் செக்குக்கான தனிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இதைக் கருத்தில் கொண்டு பிரம்மதேயம் அல்லாத மற்ற ஊர்களிலிருந்து செக்கிற்கான உரிமைக் கட்டணம் வசூலிக்கப்பட்டது தெரியவருகின்றது.[17]

செக்கிற்கு சிறப்பிடம்

கூரம் செப்பேடு[18] ". . . . ஊராட்சியும் செக்கும், தறியும், கூலமும், தரகும், கத்திக் காணமும் மற்றும் பொதுவினுல் உள்ளதெல்லாம் . . ." என்று குறிக்கின்றது. காசாக்குடி செப்பேடு[19] '. . . . . இவ்வூர் பெற்ற பரிகாரம் செக்கும், தறியும் உல்லியக் கூலியும், பிராமணராசக் காணமும்.

செங்கொடிக்காணமும் . . . . " என்று பல வரிகளைச் சொல்லிச் செல்கின்றது. இதேபோன்று, புல்லூர்ச் செப்பேடு[20] " இவ்வூர் பெற்ற பரிஹாரம் கோயில் வஸ்துச் செக்கும், தறியும், உல்லியக் கூலியும், ஏத்தக் காணமும் . . . . " என்று குறிப்பிடுகின்றது. இவற்றிலிருந்து செக்கும், தறியும் சேர்த்தே குறிப்பிடப்படுவது நோக்கத்தக்கதொன்று. இதே போன்று பிற்காலக் கல்வெட்டுகள் பலவற்றிலும் இவை சேர்த்தே குறிப்பிடப்படுவதையும், வரிகளில் இவை சிறப்பிடம் பெறுவதையும் நன்கு காணலாம். இக்காலத்தில் சிறப்பாகக் கருதப்படுவது நெசவுத் தொழில். வெளிப்படையாக அவ்வளவு சிறப்பில்லாதது செக்காட்டும் தொழில். பண்டைக் காலத்தில் எவ்விதம் செக்காட்டும் தொழில் நெருங்கிய அளவு முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பது சிந்திக்கக் கூடிய ஒன்றாகும்.

இன்று போல் அன்று மின்சாரத்தையோ, நிலத்திலிருந்து கிடைக்கும் எண்ணெய் வகைகளையோ பண்டைய மக்கள் அறிந்திருக்கவில்லை. இரவில் ஒளி தர அன்று தீப்பந்தங்களும், பெரிய பல வகை விளக்குகளும் பயன் படுத்தப்பட்டன. உணவிற்கு மட்டுமின்றி ஒளிக்காகவும் தாவர எண்ணெய் வகைகளின் உற்பத்தி அதிகமாக இருந்தது. பண்டைக் கோயில்களில் வழங்கப்பட்ட தானங்களில் நொந்தா விளக்குகளும், பிற விளக்குகளும் மிக அதிகமானவை. இவற்றிற்கு நெய்க்காக ஆடு மாடுகள், வழங்கப் பட்ட போதிலும் முற்றிலும் நெய்யே உபயோகத்தில் இருக்கவில்லை. கலியனூர் திருவொற்றியூரில் விளக்கெரிப்பதற்காகச் " செக்கு நிறை எள்ளாட்டியதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.[21] செக்காட்டும் வாணியர்களுக்குள்ள இரண்டு பெயர்கள் இங்கு குறிப்பிடத்தக்கவை. அவை 'ஜோதி நகரத்தார்', 'திருவிளக்கு நகரத்தார்'[21A] என்பவையாகும். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு பண்டைய தமிழகத்தில் செக்கு வகித்திருந்த சிறப்பிடத்தை நன்கு உணரலாம். செக்கின் உற்பத்தி அதிகமாகவும், இன்றியமையாததாகவும் இருந்ததால் அரசின் வரி வருவாய்களில் அது சிறப்பிடம் பெற்றதில் வியப்பில்லை.

செக்கார்

செக்காட்டி எண்ணெய் எடுக்கும் தொழிலாளர்கள் செக்கார்[21B] என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் பொதுவாகத் தங்களைச் செட்டிகள்[22] என்று அழைத்துக்கொள்வர். இவர்களை வாணியர்[23] என்றும் அழைப்பதுண்டு. செக்காட்டுபவர்கள் செக்காலியர்[24] என்றும் செக்கு வாணியர்[25] என்றும் தொழிலின் பெயரால் அழைக்கப்பட்டனர். திவாகர நிகண்டும்[26] திருத்தொண்டர் திருவந்தாதியும்[27] இவர்களைச் சக்கிரி என்று அழைக்கின்றன. ஆண்பாலர் செக்கான்,[28] செக்காடி,[29] செக்காட்டி[30] என்றும், பெண்பாலர் 'செக்காத்தி' பெயர் பெற்றனர்.

பிரிவுகள்

இவர்கள் கோயிலில் விளக்கிடுவதைப் புனிதப்பணியாகக் கொண்ட

தாலும், வணிகர்கள் ஆதலாலும் இவர்கள் ஜோதிநகரத்தார், திருவிளக்கு நகரத்தார் என்று அழைக்கப்பட்டனர். அதோடு மேலும் இரண்டு உட்பிரிவுகள், இவர்கள் உபயோகிக்கும் செக்குமாடுகளின் எண்ணிக்கைகளைக் கொண்டு அவைகளுக்கு பெயரிடப்பட்டுள்ளது. அவை 'ஒத்தைச் செக்கான்,' 'இரட்டைச்செக்கான்'[31] என்பவையாகும்.

திரு ஸ்டுவர்ட் (H. A. Stuvart) அவர்கள்,[32] இவர்கள் வைஸ்ய புராணத்தைப் புனிதநூலாகக் கொண்டவர்கள் என்றும், இவர்களில் நான்கு உட்பிரிவுகள் இருந்தன என்றும், அவை காமாட்சியம்மா, விசாலாட்சியம்மா, அச்சுதாலி, தொப்பதாலி என்றும் குறிக்கின்றார்கள். முதல் இருபிரிவுகள் பெண் தெய்வங்களின் பெயராலும் பின்னிரு பிரிவுகள் பெண்கள் அணியும் திருமாங்கல்யத்தின் பெயராலும் விளங்குகின்றன.

**செக்காருக்கு ஒரு சமுதாயச்சட்டம்**

செக்கார் கி. பி. 12, 13 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் சித்திர மேழி சமூகத்தில் இருந்தனர்.[33] சித்திரமேழியினர் தங்களுக்கென்று ஒரு சமுதாய அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு கலப்பையையும், பசும் பையையும் தெய்வமாக வழிபட்டுவந்தனர். இவர்கள் தங்களைப் 'பூமி புத்திரர்கள்' என்று அழைத்துக் கொண்டனர்.

செக்காரின் உரிமைகளும், இவர்களுக்குள்ள முறைமைகளும் காஞ்சீபுரத்தில் செப்பேட்டில் எழுதப்பட்டிருந்தது; அதனை இவர்கள் பின்பற்றினர் என்று தெரிகின்றது. திருக்கோயிலூரில் உள்ள கல்வெட்டில் (கி பி. 12, 13 ஆம் நூற்றாண்டு) நாடும், நகரமும் கூடியிருந்து செக்காருக்குள்ள முறைமைகளைக் காஞ்சிமாநகர் செப்பேட்டின்படி கணித்ததாக ஒரு குறிப்பு வருகின்றது. அதன்படி எண்ணெய் விலைகூறி விற்கும் உரிமையும் வேறுசில பொருள்கள் விற்கும் உரிமைகளும் இவர்கள் பெற்றிருந்தனர். ஆனால் இவர்கள்தம் நன்மை தீமைகளுக்கு உவச்சு, பறை முதலியன கொட்டிக்கொள்ள உரிமை இல்லை.[34] மேலும் தனிப்பாடல் ஒன்றில் இவர்களது முறைமைகள், காஞ்சிச் செப்பேட்டின்படி கணிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[35]

"செயங்கொண்டார் செட்டிகள்மேல் இசையாயிரம் பாடியபோது செக்கார் 'புகார் தங்கட்கு ஊர்' என்று பாடச் சொல்லப் பாடியது."

"ஆடுவதுஞ் செக்கே யளப்பதுவுமெண்ணெயே
கூடுவதுஞ் சக்கிலியக் கோதையே-நீடுபுகழ்க்
கச்சிச் செப்பேட்டிற் கணிக்குங்காற் செக்கார்தாம்
உச்சிக்குப் பின் புகாரூர்"

இந்த 'நீடுபுகழ்க் கச்சிச் செப்பேடு' கிடைத்தால் இன்னும் என்னென்ன வழிமுறைகள் செக்காருக்கு இருந்தன என்பதை நன்கு அறிந்து அன்றைய சமுதாயச் சட்டத்தைக் கண்டு மகிழலாம்.

### தாழ்த்தப்பட்டோர்

செக்கார், சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவராய் மதிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இவர்கள் எதிரே வந்தால் அது கெட்டசகுனம்[36]. எள்ளை ஆட்டுவதோ அல்லது எள்நெய்யை விற்பதோ பாபம். செக்காரே செய்வது தகும்[37]. செக்கார் உவச்சோ, பறையோ தங்களது நன்மை தீமைகளில் கொட்டிக் கொள்ளக் கூடாது போன்ற கருத்துக்கள் இங்கு நோக்கத்தக்கவை. நாலடியாரில் செக்கூர்ந்து கொண்டுவரும் செல்வம் எல்லா செல்வங்களிலும் கீழ்ப்பட்டது என்ற கருத்துடன் ஒரு பாடல் காணப்படுகிறது.

> "ஆணமில் நெஞ்சத் தணி நீலக் கண்ணார்க்குக்
> காணமிலாதார் கடுவனையர்-காணவே
> செக்கூர்ந்து கொண்டாரும் செய்தபொருளுடையார்
> அக்காரம் அன்னர் அவர்க்கு"[38]

மேலும் மனு நீதியில் செக்காட்டும் தொழில் மிகக் கீழ்பட்டதாகவே குறிக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்படுகின்றது.[39]

### செக்கின் அமைப்பு

செக்கு உரலும், உலக்கையும் கொண்டது உலக்கையை, உரலின் கீழ் பகுதியில் சுற்றுவது போன்று அமைந்த நீண்ட விட்டத்துடன் பிணைத்திருப்பர். விட்டத்தின் மறுபகுதியில் மாடுகள் இணைக்கப்பட்டு இழுத்துக் கொண்டு சுற்றி வரும். இதனைச் செக்கூர்தல்,[40] செக்குழல்தல்',[41] 'செக்கில் வைத்துத்திரித்தல்[41A] என்று குறிப்பர். இதனை இழுக்க ஒரு எருதும், இரண்டு எருதுகளும் பயன் படுத்தப்பட்டன.

### சிற்பம்

தாராசுரத்தில் இரண்டாம் இராஜராஜன் எடுப்பித்த பெரிய கோயிலின் அதிஷ்டானப் பகுதியில் பெரியபுராணக் காட்சிகள் சிறுசிறு சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் கலியனார் வரலாற்றுச் சிற்பத்தில் மேற்சொன்ன அமைப்பில் இரண்டு எருதுகளைப் பூட்டி எண்ணெய் ஆட்டுவதாகச் செக்கு காட்டப்பட்டுள்ளது. இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டுச் சிற்பம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கல்வெட்டுகளுடன் கிடைத்த செக்குகள் அனைத்திலும் உலக்கைகள் கிடைக்கவில்லை. உரல் மட்டுமே கிடைத்துள்ளன. உலக்கைகளும் கற்களால் பயன் படுத்தப்பட்டனவா அல்லது மரத்தால் பயன் படுத்தப்பட்டனவா என்பது தெரியவில்லை. தர்மபுரிப் பகுதியில் சில இடங்களில் கல்லால் ஆன செக்குகளில் மரத்தால் ஆன உலக்கையுடனும் விட்டத்துடனும் மாடுகள் பூட்டப்பட்டு இன்றும் எண்ணெய் ஆட்டப்படுகின்றது. இது தவிர செக்குகள் முழுதும் மரத்தால் அமைக்கப்பட்டும் இன்று பல இடங்களில் உபயோகிக்கப்

படுகின்றன. மின்சாரமும் யந்திரங்களும் வந்த பின் இன்று எண்ணெய் ஆலைகளில் இரும்பால் ஆகிய செக்குகளில் இயந்திரத்தின் உதவியுடன் எண்ணெய் எடுக்கப்படுகின்றது.

பொதுவாகச் செக்கின் உரலையும், உலக்கையையும் சேர்த்துப் பார்த்தால் சிவலிங்கம் போன்று தெரியும் போலும்! அதனால்தான் பண்டைய மக்கள் "செக்கென்றும் சிவலிங்கமென்றும் தெரியாதா?"[42] என்று ஒரு பழமொழி அமைத்தனர் என்று தெரிகிறது.

செக்கின் அமைப்பு பொட்டிபோல் இருக்கும் என்பது ஒரு தனிப் பாடலால் காணக்கிடக்கின்றது. அப்பாடல் கீழ்வருமாறு :

"செட்டிமக்கள் வாசல் வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டி மக்கள் வாசல் வழிப் போகோமே-யிட்ட மிலாப்
பார்ப்பாரகத்தை யெட்டிப்பாரோமே பரிசறிந்து
காப்பாருழவாளர் காண் "[43]

செக்கு உலக்கை பார்க்கமுரடாகத் தோன்றுவதால் கேலிச் சொல்லாகச் 'செக்குலக்கை' என்று முரடர்களை அழைப்பதுண்டு.[43A] செக்கில் உரலமைப்பு மேலும், கீழும் அகண்டு இடைப்பகுதி குறுகிக் காணப்படுவதை நோக்கி உவமையில் ஒரு தனிப் பாடல்[43B] குறிக்கிறது.

'காளமேகப் புலவர்
குடவாசல் விண்ணுள் வசைதானே பாடச் சொல்ல பாடிய கவி'
"செக்கோ மருங்குல் சிறுபயறோ தனஞ் சிக்களகம்
வைக்கோற் கழிகற்றையோ குழிவிழியோவிழி வாவிதொறும்
கொக்கேறி மேய்குடவாசல் விண்ணுள் வளரக் கோம்பியனீர்
எச்கோ படைத்தது நீரே நெருப்பிலெரிந்தவரே "

செக்காட்டுமிடம்

எண்ணெய் ஆட்டுமிடம் செக்குமேடு, செக்கடி,[45] செக்காலை என்று அழைக்கப்படுகிறது. எப்படி சூளைமேடு என்ற பெயரில் நகரின் புறப் பகுதிகள் உள்ளனவோ அப்படிச் செக்காலை, செக்கடி என்ற பெயர்களிலும் சில பகுதிகள் உள்ளன. பண்டைக் காலத்தில் செக்குகள் அனைத்தும் பெரும்பாலும் கொடையாக அளிக்கப்பட்டவை, ஆதலால் அவை ஊரின் பொதுவிடங்களில் காணப்படுகின்றன. அதாவது கோயில்களின் அருகில் காணப்படுகின்றன. சின்னப்பட்டி என்னும் ஊரில் கிடைத்த செக்கு இடிந்த திருமால் கோயிலின் அருகில் கிடைத்த ஒன்று. கல்வெட்டில்லாத பல செக்குகள் கோயில்களின் அருகேயே காணப்படுகின்றன. மணிக்கல் என்ற ஊரில் உள்ள செக்கு ஒரு நடுகல்லின் அருகில் கிடைத்துள்ளது. கருங்காலப்பாடியூரில் உள்ள செக்கு கொடிவீரர் பெயரால் இடப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதொன்று.

செக்காட்டும் இடத்தில் தெய்வங்கள் உறைவதாக ஒரு நம்பிக்கை உண்டு போலும்! 'செக்கடிக்கறுப்பன்' [46] என்பது செக்காட்டும் இடத்தில் உறையும் ஊர்த்தெய்வமாகக் குறிப்பிடப்படுகின்றது.

## செக்கோடு பேசப்படும் பழமொழிகளும் சொற்களும்

'செக்கடிமுத்தி! எனக்கென்னபுத்தி[47]

'செக்களவு பொன்னிருந்தாலும் செதுக்கியுண்டால் எத்தனை காலம் வரும்?'[48]

'செக்கில் அரைபட்ட எள் திரும்ப முழுசாகுமா? [49]

'செக்கில் அகப்பட்ட தேங்காய் பிண்ணுக்கு ஆவதுபோல' [50]

'செக்குலக்கை தின்றவனுக்கு சுக்குக்கஷாயமா?' [51]

'செக்குமாடு போல'

'செக்கென்றும் சிவலிங்கமென்றும் தெரியாதா'[52]

'செக்கடி முண்டன்' [53] — வெறுந்தடியன்

'செக்கணி' — கூத்துவகை [54]

'செக்குக்கீரை'—ஒருவகைக்கீரை [55]

காரைக்குடி அருகில் வ. சூரக்குடி என்று ஒரு ஊர் உள்ளது. சாலையின் ஒருபுரத்தில் ஒரு கற்செக்கும் (ஆடாதசெக்கு) மறுபுறத்தில் ஒரு ஒற்றைக்கால் மண்டபமும் உள்ளன. தூணில் சில சிற்பங்கள் உள்ளன போலும். இங்குள்ள மக்கள் இவற்றை இணைத்து

'ஆடாதசெக்கு
கூவாத சேவல்
வாழாத பெண்
ஒற்றைக்கால் மண்டபம்' என்று குறிக்கின்றனர்.

---

1 Lothal and the Indus civilization S. R. Rao, plates No. XXXI A and C
2 சிலம்பு-இந்திரவிழவூர் எடுத்தகாதை வரி 27, உ. வே. சா. அடிக்குறிப்பு
3 திருவாய் மொழி 7-1-5
4 நம்பியாண்டர் நம்பி அருளிய திருத்தொண்டார் திருவந்தாதி. பாடல் 54. திருத்தொண்டர் மாக்கதை - கழகப்பொன் விழா வெளியீடு
5 பெரியபுராணம்-12-ஆம் திருமுறை, கலியனுர் புராணம், பாடல் 11
6 நாலடியார் 374
7 பிங்கலநிகண்டு
8 பெருந்தொகை-1617, மதுரைத் தமிழ்ச்சங்கம் 1935-36 (தமிழ் நாவலர் சரிதை 212)
9 Ibid 1469, 1501 தமிழ் நா. 116, 82
10 தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கல்வெட்டு 120A/1971
11 Ibid 41/1975
12 Ibid 189/1974
13 Ibid 59/1974

14 Ibid 58/1972
15 கல்கி தீபாவளி மலர் 1975, தகடூரில் நுளம்பர் கோயில், திரு. இரா. நாகசாமி
16 Administration and Social Life under the Pallavas - Dr. C. Minakshi page 77
16A S.I.I. Vol. XIX 344.
17 Ibid
18 பல்லவர் செப்பேடுகள் முப்பது-தமிழ் வரலாற்றுக் கழகம், பக்கம் 60
19 Ibid பக்கம் 167
20 Ibid பக்கம் 203
21 ''செக்கு நிறையெள்ளாட்டிப் பதமறிந்து திலதயிலம்
பக்கமெழ மிகவுகந்தும் பாண்டில் வருமெய் துய்த்துத்
தக்கதொழிற் பெருங்கூலி தாங்கொண்டு தாழாமை
மிக்கதிரு விளக்கிட்டார் விழுந்தொண்டு விளக்கிட்டார்''
பெரியபுராணம்—12-ஆம் திருமுறை 4. கலியனார் புராணம் பாடல் 11
21A Castes and Tribes of Southern India E. Thurston-vol VII page 312-315 1975
21B 'கல்வெட்டு' இதழ் 8, பக்கம் 23-24 தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
23-26 Tamil Lexicon vol-3
27 ''கம்பக்கரிக்குஞ் சிலந்திக்கு நல்கிய கண்ணுதலோ
னும்பர்க்கு நாதற் கொளி விளக்கேற்ற குடவிலனுய்க்
கும்பத்தயிலம் விற்றுஞ் செக்குமன்றுங் கொள்கூலியனுய்
னம்பற்கெரித்த கலியொற்றி மாநகர்ச் சக்கிரியே''
நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி பாடல் 54
28-30 Tamil Lexicon vol-3
31 21-A பார்க்க
32 Ibid
33 21-B பார்க்க
34 Ibid
35 பெருந்தொகை-1469, மதுரைத் தமிழ்ச் சங்கம் 1935-36, தமிழ் நா. 116
36 Pre Pallavan Tamil Index page. 379 Dr N. Subrahmanian
37 21-A பார்க்க
38 நாலடியார் 374
39 21-A பார்க்க
40 நாலடியார் 374
41 27 பார்க்க
41A Tamil Lexicon vol 3
42 தமிழ் நாட்டுப் பழமொழிகள்—துர்க்காதாஸ் எஸ். கே. சாமி, வானதி பதிப்பகம் 1975
43 பெருந்தொகை-1501 தமிழ் சங்கம் 1935-36 தமிழ்நாடு 82
43A Ibid 1617 தமிழ் நா 212
43B Tamil Lexicon vol-3
44-46 Ibid
47-52 பார்க்க 42
53-55 Tamil Lexicon

(பக்கம் 19ல் 'வச்சதிருமேனி' என்பதை 'செய்வித்ததிருமேனி' என்று படிக்கவும்.)

# நுளம்பர் கால நடுகற்கள்

நடன. காசிநாதன், எம். ஏ.,
பதிவு அலுவலர்

தருமபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில், அரூரிலிருந்து தீர்த்த மலைக்குச் செல்லும் சாலையில், செல்லம்பட்டி என்று ஒரு சிறு கிராமம் உள்ளது. அவ்வூரின் புறத்தே ஆற்றங்கரையில் வேடியப்பன் கோயில் ஒன்று காணப்படுகிறது. அங்கு இரண்டு நடுகற்கள் உள்ளன.[1] இரண்டு நடுகற்களும் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. இவை தருமபுரி நடுகற்கள் என்ற நூலில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.[2] ஒரு கல்வெட்டு சகர யாண்டு 820 (கி. பி. 898) லும் மற்றொரு கல்வெட்டு சகர யாண்டு 822 (கி. பி. 900) லும் எழுதப்பட்டிருக்கின்றன. சகர யாண்டு 820-இல் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு "ஐயப்பதேவன் னிராச்சியமாள" என்று தொடங்குவதால் ஐயப்பதேவனின் ஆட்சிக் காலத்தில் பொறிக்கப்பட்ட தென்பதைத் தெளிவாகச் சுட்டுகிறது. தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம் ரெட்டியூர்,[3] தருமபுரி வட்டம் பலிஞ்சரஹள்ளி,[4] அரூர் வட்டம் பெரிய மன்னி மடுவு[5] போன்ற இடங்களிலிருந்தும் ஐயப்பதேவன் காலத்திய நடுகற்கள் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளன.

## அய்யப்பதேவன் யார்?

இந்த மன்னன் அய்யப்பதேவன் யாராக இருக்கக்கூடும்? நுளம்பர் குலத்தில் அய்யப்பதேவன் என்ற மன்னன் ஒருவன் இருந்தான் என்பது நுளம்பர் வரலாற்றிலிருந்து தெரியவருகிறது.

நுளம்ப மன்னர்கள் முறையே :-

த்ரிணயம பல்லவன்
|
மங்கள நொளம்பாதிராஜன்
|
சிம்ஹபோதன்
|
சாரு பொன்னேரன்
|
பொழல் சோர நொளம்பன்
|
மஹேந்திரன்
|
அய்யப்பதேவ நன்னிகன்

அண்ணிகன் | திலிப்பரசர்

என்று ஹேமாவதி கல்வெட்டு கூறுகிறது.[6] கி.பி. 889-ல் பொறிக்கப்பட்டுள்ள தருமபுரிக் கல்வெட்டு முறையே :-

பல்லவாதி ராஜன்
|
நொளம்பாதி ராஜன்
|
மஹேந்திர நொளம்பன்
|
அய்யப்பதேவ நன்னிகன்

என்று கூறுகிறது.[7] இக்கல்வெட்டு மகேந்திர நொளம்பனின் காலத்தியது. கி.பி. 977ஐச் சேர்ந்த கலுகோட் கல்வெட்டு மஹேந்திரன், அவர் மகன் அய்யப்பன், அவர் மகன் அண்ணிகன், அவர் மகன் இருளன் மற்றும் திலிப்பரசர் ஆகியோரைக் குறிப்பிடுகிறது.[8]

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் கல்வெட்டுகளிலும் அய்யப்பன் மஹேந்திரனின் மகனுகக் குறிக்கப்பட்டுள்ளான். கி.பி. 883-இல் மஹேந்திர நொளம்பன் மிகுந்த வலிமை வாய்ந்த மன்னனுகத் திகழ்ந்திருக்கிறுன் என்பது 'திரிபுவன மல்லதீரன்' என்ற அவனது விருதுப் பெயரால் உணரமுடிகிறது.[9] கி.பி. 891-இல் மஹேந்திரன், ராச்சயகங்கன் என்பானைப் போரில் வென்றிருக்கிறுன் என்பது இக்கலி என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டால்[10] புலனுவதிலிருந்து மஹேந்திரன் கி.பி. 891 வரை ஆட்சி செய்திருக்கிறுன் என்பது தேற்றம்.

ஆகவே கி. பி. 891-க்குப் பிறகுதான் ஐயப்பதேவன் ஆட்சி புரிந்திருக்க வேண்டும். ஐயப்பதேவனின் செல்லம்பட்டிக் கல்வெட்டு கி. பி. 900-இல் பொறிக்கப்பட்டுள்ளது மேலே கூறிய கருத்துக்கு மிகவும் பொருத்தமாகக் காணப்படுகிறது. எனவே இந்த அய்யப்தேவன் நுளம்ப மன்னன்தான் என்பதில் ஐயமில்லை. இவன் ஏறக்குறைய கி. பி. 922 வரையில் ஆண்டிருக்கிறுன்.[11]

செல்லம்பட்டிக் கல்வெட்டு I

ஸ்வஸ்திஸ்ரீ சகரயாண் டெண்ணூற் றிருபது
கங்காணுமன் சாய[டு] மாளத் தகடூர் மாவலிவாண
ராடரடியான் கடல் மாணிக்கன்[னு]ளை குன்றினை ஆ[ள்]வன்
மாமன் கோவூர் நாட் டைந்நூறுமுடைய மழற்பை
யன் னடியான் சூழி புளியன் புலி எறிந்து பட்டான் மதியுளி

செல்லம்பட்டிக் கல்வெட்டு II

ஸ்வஸ்திஸ்ரீ சகரயா[ண்] டெண்ணூற்றிருபத் திரண்டாவது ஆதித்த
ன் மகரத்திலிற்க ஐயப்பதேவன் விராச்சியம் மாளக் கங்காணுமன்
மகன் பிருதிபதியும் நுளம்பன் மகன் சிவமாரைய்யனும் மற

*வகுன்றில் லெறிந்த ஞான்று தகடூருடைய மாவலிவாணராயரடியா*
*ன் கூடல் மாணிக்கன் சிவமாரைய்யனுக்காய் எறிந்து பட்டா*
*ரவர் பெ*
*ரியம் மகன் மாதேவன் னிக்கல்லு நடுவித்தான் ஸ்ரீ மதியுளி*

## ரெட்டியூர்க் கல்வெட்டு

*ஸ்வஸ்தி ஸ்ரீ அய்யப்பதேவன்*
*நாடாள வேணுடுடைய இருசப்பை*
*யனுர் அடியான் அரைய குட்டி ப*
*ன்றி குத்தி பட்டான்*

## பெரிய மன்னிமடுவுக் கல்வெட்டு

*ஸ்வஸ்தி ஸ்ரீ பசிசி*
*ஐயப்ப*
*தேவன் புற*
*மலே நாடு*
*வூரிசியம்*
*செய்ய . ம*
*யனுகர்கு*
*தின்னுடி இரு*
*கலம் பகயா*
*வர் மகன்*
*பூமயன் தொ*
*றுன் மீட்டுப் பட்டா*

## பலிஞ்சரஹள்ளி கல்வெட்டு :

*. . . . யப்பதேவன் இ*
*. . . . [ஆ]ள்கின்ற காலத்*
*. . . . கலேயமன் மகன் [நா]கன் குத் . . . .*

## அய்யப்பன் ஆட்சிப் பகுதி

பெரியமன்னிமடுவிலிருந்து கிடைத்துள்ள கல்வெட்டில் அய்யப்ப தேவன் புறமலே நாட்டுப் பகுதியை ஆண்டு வந்ததாகத் தெரிகிறது புறமலே நாட்டுப் பகுதி தருமபுரி பகுதியை அடுத்துள்ள அரூர் வட்டப் பகுதியாகும்.

## கங்கரோடு போர்

செல்லம்பட்டிக் கல்வெட்டில் நுளம்பன் மகன் சிவமாரையனுக்கும் கங்காணுமன் மகன் பிருதிபதிக்கும் மறவகுன்று என்னுமிடத்தில் போர் நிகழ்ந்ததாகக் குறிக்கப்படுகிறது. இங்கு குறிக்கப்பெறும் நுளம்பன்

என்பவன் அய்யப்பதேவனுகவே இருக்கக்கூடும். இவன் மகன் சிவமாரையன் என்று குறிக்கப்படுகிருன். அய்யப்பனுக்கு அண்ணிகன், திலிப்பரசர் என்று இரு குமாரர்கள் இருந்தனர் என்பது ஹேமாவதி கல்வெட்டால் தெரியவருகிறது. ஆகவே சிவமாரையன் என்னும் பெயர் அண்ணிகன், திலிப்பரசர் ஆகியவர்களில் யாருக்கேனும் ஒருவர்க்கு மாற்றுப் பெயராக இருக்கலாம். அல்லது சிவமாரையன் என்று ஒரு மகன் அய்யப்பதேவனுக்கு இருந்திருக்கலாம்.

இச்சிவமாரையனுக்குத் துணையாகத் தகடூரை ஆண்டு வந்த மாவலிவாணராயன் போரில் உதவியிருக்கிருன். இம்மாவலிவாணராயன் பாண மன்னன் இரண்டாம் விஜயாதித்யனுவான். இரண்டாம் விஜயாதித்யன் அய்யப்பதேவனின் தந்தையான மஹேந்திரனுல் வெல்லப் பட்டு மஹேந்திரனுக்கு அடங்கியவனுக இருந்திருக்கிருன்.[12] ஆகவே அவன் அய்யப்பதேவனுக்கு உறுதுணையாக இருந்திருக்கலாம் என்பதில் ஐயமில்லை.

ஆனுல் தகடூர் நடுகல்லில்,[13] நுளம்பன் மாவலிவாணராயனை வஞ்சித்து நாடு கொண்டான் என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி அய்யப்பதேவன் ஆட்சியின் பிற்காலத்திலோ அல்லது இவன் தந்தையான மஹேந்திரனின் ஆட்சிக் காலத்திலோ நடந்ததாகக் கருதலாம்.

பிருதிபதி என்பவன் கங்க மன்னன் இரண்டாம் பிருதிவிபதி ஆவான். இவன் கி. பி. 940 [14] வரையில் ஆண்டிருப்பதால் கி. பி. 900-ல் நிகழ்ந்த போரில் குறிக்கப்பெறும் பிருதிவிபதி இவனுகத்தான் இருக்க வேண்டும்.

## அய்யப்பதேவனின் மக்கள்

முன்னரே குறிப்பிட்டது போன்று அய்யப்பதேவனுக்கு அண்ணிக நொளம்பன், இரிவ நொளம்பன் ஆகிய மக்கள் இருந்திருக்கின்றனர். அண்ணிகன் நொளம்பன் கி. பி. 920 முதல் 940 வரை ஆண்டிருக்கிருன். தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் முத்தானூரிலிருந்து ஒரு கல்வெட்டும்; அதே மாவட்டம் கிருஷ்ணகிரி வட்டம் இளவம்பாடியிலிருந்து ஒரு கல்வெட்டும்[17] அண்ணயன் என்ற மன்னனைக் குறிக்கின்றன. முத்தானூர்க் கல்வெட்டில் "அண்ணயன் வீர நுளம்பனுக் காண்டி ரண்டும்" சகர யாண்டு 847ம் கொடுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து அண்ணயன் 933-இல் ஆட்சிக்கு வந்திருக்கிருன் என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்தக்காலம் அண்ணிக நொளம்பன் காலத்தோடு ஒத்து வருகிறது. ஆகவே இந்த அண்ணயன், அண்ணிக நொளம்பன்தான் என்பதில் ஐயமில்லை. முத்தானூர்க் கல்வெட்டிலிருந்து அய்யப்பதேவன் கி.பி. 922 வரையில் ஆண்டிருக்கிருன் என்பதை மறைமுகமாக உணர முடிகிறது.

முத்தானூர்க் கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ சகரையாண்டெண்
ணூற்று நாற்பத்தேழாவது அண்
ணயன் வீர நுளம்பனுக் காண்டி
ரண்டாவது வல்லவரையாந் நாட்டார்
தொறுக் கொ
ள்ள பலா
ன்னையூர்
காமுண்டர்
மணியர் ம
ணியமனு
ர் தொறு மீ
ட்டுப்
பட்டார்

இளவம்பாடிக் கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ இரண்டா
வது அண்ணயனுர்
ஆளாநிஉக கோவூர் நாட்டு
சிறு புலூர் தாழிபுகனூர் ம
கன் மோடன் ஊர் புழிவல ப
ட்டான்

---

1. கட்டுரை ஆசிரியரும் திரு. கு. தாமோதரன், பதிவு அலுவலரும், படி யெடுத்து வந்தனர்.
2. தருமபுரி நடுகற்கள், 1973/14, 1973/15, பொறுப்பாசிரியர் டாக்டர். இரா. நாகசாமி.
3. Ibid 1972/26. திரு. மா. சந்திரமூர்த்தி, பதிவு அலுவலர் கண்டு பிடித்தார்.
4. Ibid 1973/25
5. Ibid 1974/72
6. Epigraphia Carnatica Vol. XII, C. 24, 28, 35, 36.
7. Nolambas, M. D. Sampath, Prof. K. A. Nilakanta Sastri Felicitation Volume, Page 166.
8 MAR 1924, Para 4.
9. Nolambas, M. D. Sampath. Prof. K. A. Nilakanta Sastri Felicitation Volume, p 171
10. Epigraphia Carnatica Vol. VI, p. 49
11 தருமபுரி நடுகற்கள், 1974/75 பொறுப்பாசிரியர், டாக்டர் இரா. நாகசாமி
12. Epigraphia Carnatica Vol. X, Sp. 6 and 5.
13 S.I.I. Vol. VII, p. No. 581.
14 Colas, K. A. Nilakanta Sastri, p. 128.
15. Epigraphia Carnatica Vol X
16. தருமபுரி நடுகற்கள் No. 1974/75
17. செங்கம் நடுகற்கள் 1971/80, டாக்டர், இரா. நாகசாமி.

விதிக்கே சென்று விழிப்பர யான்விடுத்த
தூதிக்கோர் மாதந் தொகுத்துரையாய்-நீதிக்கோர் 609
மன்றூர் குடையுதவு வள்ளளெழு மூவரையும்
ஒன்றுத லேநின் றுருவாக்கி-நன்றுகப் 610
பொற்சங்கந் தன்னைநிதி போர்க்கு விருந்தாக்கி
நற்காம தேனுவினை நாடாக்கி-விற்காமன் 611
நீளிருண்ட மேகத்தை நீள்கைக் குடையாக்கி
தாளிரண்டும் பற்பநிதி தானுக்கி-தோளிரண்டு 612
சந்தான கற்பத் தருவாக்கி யுள்ளத்தைச்
சிந்தா மணியாகச் செய்தனையே-கந்தாது 613
முன்காட்டு மாரன் முடிந்தபோற் கண்டாக்கால்
பின்காட்ட லாமோ பெருமானே-மின்காட்டு 614
நாரியர்க்கு நெஞ்சுருக நன்மகவைத் தேரூர்ந்த
நேரியர்க்கு நன்மருமகன் நீயன்றே-சேரலர்க்கும் 615
அக்குடைக்குஞ் செங்கோ லவருக்குஞ் செங்கதிரோன்
மக்களொரு நால்வரென வந்துதித்தாள்-மைக்குவளை 616
தந்து மதன்பகையை சாடிநின் றுரகல
சிந்தையடத் தாலன்றிச் செல்லவொட்டோம்-தந்தையர்க்கு 617
மாவர்க்க மாகியனின் மாமாயம் சேரலர்க்கு
மூவர்க்குஞ் சென்று முறையிடுவோம்-யாவர்க்கும் 618
மேலாய பல்லவர்க்கும் வேம்பே யினிதல்லாற்
காலாற் கரும்பெல்லாம் கைக்கொள்வோம்-மாலாதிப் 619
பேருன னின்பாற் பிரியா திருக்கவும்பன்
னூறு யிரவாண் டகலாமே-வீறுகக் 620
கற்று றுரைக்கும் கவியனைத்தும் கற்றுரைக்கப்
பெற்றுன்மற் றெல்லாம்யாம் பெற்றிலமே 621
நற்றமிழைச் செய்த கவிஞன் வழி சீர் வாழி பேர் வாழி
அய்யன் சிவந்தெழுந்தெழுதன்பன் வாழி வாழி

கி. பி. 17-ம் நூற்றுண்டில் எழுந்த பல இலக்கியங்களில் மல்லை சிவந்தெழுந்த பல்லவராயன் உலா, ஓர் உயர்ந்த உலாவாகத் திகழ்கிறது. இவ்வுலா, வரலாற்றுச் செய்திகளை அதிகம் தருகிறது. குடுமியான் மலையில் உள்ள பல கட்டிடப் பகுதிகளைக் கட்டியவர்கள் யார், யார் என்ற செய்திகளையும் இதன் வாயிலாக அறிய முடிகிறது. அக்காலத்திலிருந்த சமுதாயத்தையும் இது பிரதிபலிக்கிறது. பல்லவராயர் தலைவர்கள் புலிக்கொடியுடன் மேழிக்கொடியும் தாங்கினர் (கண்ணி 162) என்று அறிகிறோம். இந் நூலில் பாட்டுடைய தலைவனை முன்னேக்கி காமம் பொருளாகப் பாடியதாக தோன்றுகிறது. பேரிளம் பெண்ணைக் குறிக்குமிடத்தில் "காமகலை ஏட்டுக்கு உரை எழுதுவாள்" போல விளங்கினுள் என்று (576) குறிப்பதால் இக்கருத்து வரையறுகிறது. இதே செய்யுளில் மற்றொரு குறிப்பும் காணப்படுகிறது 'அவிநய நூல் பாட்டுக்கு பல்லவன் உரை எழுதினான்' என்று அது குறிப்பது வரலாற்றுக்குப் பயனுடைய செய்தி.

இந்நூல் போன்று வரலாற்றுத் தொடர்புடைய பல தமிழிலக்கியங்கள் அச்சில் வராமல் பல இருக்கின்றன. அவை வெளிவரின் பயன் மிகும்.

— ஆசிரியர்.

# மதுரை சுந்தரேசர் கோயில் விமானம்

மதுரையில் ஆலவாயப்பர் கோயில் கர்ப்பகிரஹ விமானம் ஒரு தனி அமைப்புடையது. அவ்விமானத்தை எட்டு திசைகளிலும் எட்டு யானைகள் தாங்கி நிற்பது போல அமைப்புக் காணப்படுகிறது. இவற்றை திக்கஜங்கள் என்று அழைப்பர் இவ்விமான அமைப்பு மற்றெங்கும் காணப்படாத அமைப்பாகும். இதை இந்திர விமானம் என்று அழைக்கின்றனர். இதன் தனித்தன்மைக்கு காரணம் என்ன? இது ஏன் இந்திர விமானம் என்று அழைக்கப்படுகிறது?

மதுரையில் முன்னர் கடம்ப வனம் இருந்தது. அங்கு தன் குழாத்துடன் இந்திரன் வந்தான். அங்கு இருந்த சிவலிங்கத்தைக் கண்டு அதை முறைப்படி வணங்கினான். மழையிலும் வெய்யிலிலும் இருக்கும் அந்த சொக்கநாதப் பெருமானுக்கு ஒரு விமானம் அமைக்க விழைந்தான். விருத்தாசுரனைக் கொன்ற பழிபோகச் செய்த விமானங்கள் பல உண்டு அதில் சிற்ப நன்னூலுக்கு ஏற்ப செய்யப்பட்ட ஒரு சிறிய தெய்வவிமானம் இருக்கிறது என்று அருகிருலிந்த தெய்வத் தச்சன் கூறினான். உடனே இந்திரன் தெய்வத் தச்சனிடம் நீ சென்று அந்த விமானத்தை யானை மீது கொண்டு வா என்றான்.

> "மெய்ப்படு சிற்பம் வல்ல உத்தம விரைந்து நீ போய்
> ஒப்பில் காஞ்சன விமானமும் உம்பலில் கொணர்தி என்ன
> அப்பொழுது அவன் போய் ஆசை யானையில் கொணர்ந்து காட்டத்
> தப்பிலா விதியினாங்கச் சாத்தினான் குளிர் விமானம்"

என்று பெரும்பற்றப்புலியூர் நம்பி தமது திருவிளையாடல் புராணத்தில் பாடியுள்ளார். ஆதலின் இது இந்திரவிமானம் எனப் பெயர் பெற்றது என்பது தெளிவு. ஆசை யானை எனில் திக்கஜம் என்று ஐயர் அவர்கள் குறிப்பு கூறும்.

இது புராண வரலாறு. ஆனால் ஒரு உருவகமாகவும் கூறப்பட்டுள்ளது இந்த மாபெரும் உலகு ஒரு பேரண்டம். இதை எட்டு திக்கஜங்கள் தாங்குகின்றன. இவற்றின் உட்பொருளாய் இருந்து உயிர்க்கின்ற பரமனே சொக்கநாதப்பிரான். இதுவே இந்திரன் சமைத்த விமானம் என்னலாம் என்று பெரும்பற்றபுலியூர் நம்பி பாடியுள்ளார். இதோ அவரது பாடல்:

> முன்னை எண் திக்கயங்கள் தாங்கிடும் முதுபேரண்டம்
> மன்னும் இந்திரனார் சாத்தும் வாளிழி விமானமாகும்
> தென்னவன் சிவனேயாகும் சிவலோக மதுரையாகும்
> முன்னரும் மனிதர் முற்றும் கணங்களாம் ஒருங்காவே. (17)

இந்தப் பாடலின் அடிப்படையில்தான் மதுரையில் இப்பொழுதுள்ள விமானம் எழுப்பப்பட்டுள்ளது எனில் மிகையாகாது. எட்டு திக்கஜங்கள் தாங்குகின்ற இந்த விமானத்தை நாயக்க மன்னர் வழியை மதுரையில் நிலை நிறுத்திய விஸ்வநாத நாயக்கன் கட்டினான் என்பர் அவன் கி. பி. சுமார் 1550-ல் இதைக் கட்டினான் என்பர். பெரும்பற்றப்புலியூர் நம்பி தமது திருவிளையாடல் புராணத்தைப் பாடிய காலம் 13-ம் நூற்றாண்டு என்பர். விசுவநாத நாயக்கனின் மனதை பெரிதும் கவர்ந்தால் அதையே கருத்தாகக் கொண்டு சொக்கநாதப் பெருமானின் விமானத்தைப் படைத்திருக்கிறான். பண்டே கலவரலாற்றின் அடிப்படையில் எடுக்கப்பட்ட விமானத்துக்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டு.

—டாக்டர் இரா. நாகசாமி.

# சோலைமலைக் கிழவன்

டாக்டர் இரா. நாகசாமி

மதுரைக்கு அருகில் உள்ள அழகர் கோயில் இருக்கும் மலையை அழகர் மலை என்று இப்பொழுது கூறுகின்றோம். ஆனால் பண்டைய இலக்கியமான பரிபாடல் இதை

இருங்குன்றம் — திருமாலிருங்குன்றம்
சோலைமலை — திருமாலிருஞ்சோலை
திருவரை

எனக் குறிக்கின்றன. பரிபாடலில் குறிப்பாக இப்பெயர்கள் குறிக்கப்படுகின்றன. பூதத்தாழ்வார் இதை இருஞ்சோலைமலை என்று பாடுவார் (2229). நம்மாழ்வார் 'மாலிருஞ்சோலை' என்றும்; 'திருமாலிருஞ்சோலைமலை' 'மாலிருஞ்சோலைமலை' என்றும் பாடுகிறார் (3733-3754). மாலிருஞ்சோலை என்றும் மாலிருஞ்சோலைமலை என்றும் பெரியாழ்வாரும் பாடுகிறார் (347-348). (அடைப்புக்குள் உள்ளவை நாலாயிர திவ்யப்ரபந்த பாடல் எண்கள்)

அவ்வாறு இருக்க இம்மலை எப்பொழுதிருந்து அழகர் மலை என அழைக்கப்பட்டது?

பெரியாழ்வார் பாடியுள்ள கீழ்வரும் பாடலைக் காணுங்கள்.

பலபல நாழஞ்சொல்லி பழித்த சிசுபாலன் தன்னை
அலவலமை தவிர்த்த அழகன் அலங்காரன் மலை
குலமலை கோலமலை குளிர்மாமலை கொற்றமலை
நிலமலை நீண்டமலை திருமாலிருஞ்சோலையதே (353)

இந்தப் பெரியாரின் பாடலில் 'அழகன் அலங்காரன் மலை' என்று வந்துள்ளதைக் கவனிக்கவும்.

அஷ்டப்பிரபந்தம் என்னும் பாடல்களை பிள்ளை பெருமாள் ஐயங்கார் என்னும் அழகிய மணவாளதாசர் இயற்றினார். அவற்றில் அழகர் திருவந்தாதி என்று நூறு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் இதை 'மாலிருஞ்சோலைமலை' என்றும் இங்குள்ள ஆற்றை சிலம்பாறு என்றும் கூறுகிறார் (49) அப்பாடல்களில் இங்கு உறையும் திருமாலை 'அழகன்' என்றும் 'அலங்காரன்' என்றும் அடிக்கடி குறிக்கிறார். 'சோலைமலை அழகன்' (69). ஆழ்வார்களின் பாசுரங்களில் திளைத்த பெருமகன் ஆதலின் மணவாளதாசரின் பாடல்கள் ஆழ்வார்களின் பாடல்களையே பிரதிபலிக்கின்றன. குறிப்பாக பெரியாழ்வாரின் 'அழகன் அலங்காரன் மலை' என்னும் சொற்றொடரே அழகர் திருவந்தாதியில்

மீண்டும் மீண்டும் இடம் பெறுகிறது. அழகிய மணவாளதாசர் 12-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தவர் என்பர் சிலர். திருமலை மன்னனின் அவையை அலங்கரித்தவர் என்பாரும் உளர். பெரியாழ்வாரின் பாடலை அடிப் படையாகக் கொண்டு, அஷ்டப்பிரபந்தத்தைப் பின் பற்றியே 'சோலைமலை' அழகர்மலை ஆயிற்று என்பதில் ஐயமில்லை.

இம்மலையையே பழமுதிர்ச்சோலை என்றும் குறிப்பர். திருமுருகாற் றுப்படையில் முருகன் உறைவிடமாக இது குறிக்கப்படுகிறது. 'பழமுதிர் சோலை மலைகிழவோனே' என முருகாற்றுப்படை முடியும். 'பழம் முற்றின சோலைகளை உடைய மலைக்கு உரிமை உடையோன்' என நச்சினார்க் கினியார் உரை கூறுவார். இவ்வுரையை சற்று மாற்றி" பழம் உதிர்கின்ற 'சோலை மலை'யின் கிழவன் உரிமையுடையவன்" எனப் பொருள் கூறுவதே பொருந்தும். இவ்வுரையில் 'சோலைமலை கிழவன்' என்பது சிறப்பு. 'சோலைமலை' என்ற பெயரை பரிபாடலும் (15) குறிக்கும் "சிலம்பாறணிந்த சீர்கெழு திருவில் சோலையொடு தொடர் மொழி மாலிருங்குன்றம்" என்று சோலை என்னும் சொல் தொடர் மொழியாக வந்த மலை எனக் கூறுகிறது. ஆண்டாள் தமது பாடலில் "சோலைமலைப் பெருமான்" என்று இம்மலைத் திருமாலைப் பாடுகிறுள். மணவாளதாசரின் அழகர் திருவந்தாதியும் இம் மலையை 'சோலைமலை' என்றும் 'சோலைமாமலை' என்றும் பல பாடல்களில் குறிக்கும்.

அருணகிரியார் தமது பாடல்களில் 'சோலைமலை நின்ற பெருமாளே எனப்பாடுகிறுர் தமது பாடல்களில் பத்தில் சோலைமலை என்றும் இரு பாடல்களில் , 'பழமுதிர் சோலைமலை' என்றும் ஒரு பாடலில் 'பழமுதிர் சோலை' என்றும் மூன்று பாடல் களில் 'குலகிரி' என்றும் பாடுகிறுர். அஷ்டபிரபந்த ஆசிரியர் போல அருணகிரியாரும் 'சோலை மாமலை' என்று பாடுவதும் குறிக்கத்தக்கது. சோலைமலையில் உள்ள ஆறு 'சிலம்பாறு' என பரிபாடலும் பிரபந்தங்களும் கூறும் எனக் கண்டோம். அருணகிரி யார் தமது பாடலில்

ஆயிரமுகங்கள் கொண்ட நூபுரமிரங்கு கங்கை
யாரமர வந்தலம்பு துறை சேரத்
தோரணமலங்கு துங்க கோபுரநெருங்குகின்ற
சூழ்மணி பொன் மண்டபங்கள் ரவிபோலச்
சோதியின் மிகுந்த செம்பொன் மாளிகை விளங்குகின்ற
சோலைமலை வந்துகந்த பெருமாளே'

எனப்பாடுகின்றுர். 'சிலம்பாறு' இதில் நூபுரகங்கை என அழைக்கப் படுகிறது.

ஆதலின் மாலிருஞ்சோலை என்னும் மலையே சோலைமலை எனப் பட்டது. அதுவே 'பழம் உதிர் சோலைமலை' என்பது தெளிவு.

இங்கு மேலும் ஒன்றும் கூறுதல் வேண்டும். பொருநராற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் 'காவிரி புரக்கும் நாடு கிழவோன்' என்று அழைக்கப்படுகிறான். இதுபோலவே பெரும்பாணாற்றுப் படையின் இறுதியடியாக வரும் 'ஒளிர் இலங்கு அருவிய மலை கிழவோனே' என்பது பாட்டுடைத் தலைவனான இளந்திரையனைக் குறிக்கும். அதேபோல் மலைபடுகடாத்தின் இறுதியடியான "குன்று சூழிருக்கை நாடு கிழவோனே" என்பது அப்பாட்டுடைத் தலைவனைக் கூறுகிறது. ஆதலின் அதே மரபின் படி முருகாற்றுப்படையின் இறுதியடியான "பழம் உதிர் சோலைமலை கிழவோனே" என்பது அப்பாட்டுடைத் தலைவனைக் குறிக்கும். ஆதலின் திருமுருகாற்றுப் படை பொதுவாக முருகனைப் பற்றிய பாடல் என்னாது சோலைமலையில் உறைகின்ற முருகன் மீது பாடப் பெற்றது என்பதே பொருந்தும். மதுரையின் ஒரு புறத்தே திகழும் பரங்குன்றில் உறையும் குமரனைப் பரிபாடல் பாடுவது போன்று மறுபுறத்தே திகழும் சோலை மலைக் குமரனை முருகாற்றுப்படை பாடுகிறது.

---

# திருமாலிருஞ்சோலை நின்றான் மழவராயர்

அழகர் கோயிலில் இருக்கின்ற பெருமாளை ஆழ்வார்கள் "திருமாலிருஞ்சோலை நின்றான்" என்று பாடுவார்கள். இந்த பெயரையே சில குறுநில மன்னர்கள் தங்களது பெயராகவும் பூண்டு மகிழ்ந்தார்கள்.

மாவலிவாணாதிராயர் என்ற குறுநில மன்னர்கள் தங்களை "திருமாலிருஞ்சோலை நின்றானான மாவலி வாணாதிராயன்" என்று கூறிக்கொண்டார்கள்.[1] அது போலவே சில மழவராயர்களும் இப்பெயரையே பூண்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

விருத்தாசலத்திலுள்ள ஒரு கல்வெட்டில்[2] திருமாலிருஞ்சோலை நின்றானான மழவராயர் என்பவர் குறிக்கப்படுகிறார். அவர் பாண்டியன் குலசேகரன் காலத்தில் வாழ்ந்தவர்.

— ச. செங்கல்வராயன்.

1. கல்வெட்டு காலாண்டு இதழ் — 6 — பக்கம் — 3
2 No. 145 of S. I. I. VII.

# தென்னாசியச் சாசனவியல் நான்காவது மகாநாடு

வி. சிவசாமி,
இணைச்செயலாளர், யாழ் தொல்பொருளியற் கழகம்.

யாழ்ப்பாணம் தொல்பொருளியற் கழகம் நடத்திய நான்காவது சாசனவியல் மகாநாடு மார்ச் 27-28ம் திகதிகளிலே, இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகத்திலே நடைபெற்றது. இலங்கையிலும், இந்தியாவிலிருந்தும் 22 சாசனவியலாளர், அறிஞர் கட்டுரைகள் அனுப்புவதாகப் பதிவு செய்திருந்தனர்.

இம்மகாநாட்டிலே, பேராசிரியர் ஓ.எச்.டி ஏ. விஜேசேகர அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தலைமை தாங்கினார். இவர் முன்னை நாள் கொழும்பு சர்வகலாசாலைத் துணைவேந்தராகவும், இலங்கைப் பல்கலைக்கழக வடமொழிப் பேராசிரியராகவும் விளங்கியவர். தற்போது பௌத்த கலைக்களஞ்சியத்தின் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். 27ம் திகதி காலை இவரும், துணைவியாரும் மேளவாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தொடக்கத்திலே கழகத்தலைவர் திரு. ஜேம்ஸ் தே. இரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து யாழ்ப்பாண வளாகத் தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி அனைவரையும் வளாகத்தின் சார்பிலே வரவேற்றார். இதன்பின், பிரதம விருந்தினரான பேராசிரியர் விஜேசேகர தமது தலைமையுரையினை வழங்கினார். இவ்உரையிலே வடமொழி இலக்கியத்திற்கும், தொல்லியலுக்கும் குறிப்பாகச் சாசனவியலுக்குமிடையிலுள்ள தொடர்புகளை வற்புறுத்தினார்.

அன்று பிற்பகல் பிராமிச் சாசனங்கள் பற்றிய விசேட கருத்தரங்கு நடைபெற்றது. இவ் ஆண்டுச் சாசனவியல் மகா நாட்டின் பிரதானவிடயமாகப் பிராமிச் சாசனங்கள் பற்றிய ஆய்வு எனக் குறிப்பிட்டதற்கேற்ப 11 கட்டுரைகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இவற்றிலிரண்டு தமிழில் எழுதப்பட்டவை. இவற்றிலே பல கட்டுரைகள் வாசிக்கப்படடிருந்தன. இக்கருத்தரங்கிற்கு இலங்கைத் தொல்லியல்துறை உதவி ஆணையாளரும், சாசனவியலாளருமான கலாநிதி சத்தமங்கல கருணாரத்ன தலைமை தாங்கினார்.

28-ஆம் திகதி முற்பகல், பிந்தியகாலச் சாசனங்கள் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. இதற்குப் பேராசிரியர் கா. இந்திரபாலா தலைமை தாங்கினார். ஏழு கட்டுரைகள் வாசிக்கப்பட்டன.

அன்று பிற்பகல் கருத்தரங்கு தமிழிலே நடைபெற்றது. கலாநிதி அ. சண்முகதாஸ், திரு. நடன காசிநாதன் ஆகியோர் இதற்குத் தலைமை தாங்கினர். இவற்றிலிரண்டு பிராமிச் சாசனங்கள் பற்றியவை. ஒவ்வொரு கருத்தரங்கிலும் கட்டுரை ஒவ்வொன்றும் வாசிக்கப்பட்டபின் சுவையான பயனுள்ள கலந்துரையாடல்களிடம்பெற்றன.

தென்னாசியச் சாசனவியல் பற்றிப் பல்வேறு கோணங்களிலிருந்து நோக்கி எழுதப்பட்டுள்ள இக்கட்டுரைகள் நல்லதரமானவை. கட்டுரைகள் எழுதிய இந்திய ஆய்வாளர்களிலே திரு. நடன. காசிநாதனும், திரு. கு. தாமோதரனும் மகாநாட்டுக்குச் சமூகமளித்துச் சிறப்புச் செய்தனர். இந்தியச் சாசனவியல் பற்றிய கட்டுரைகளின் கலந்துரையாடல்களிலிவர்களின் பங்கு நன்கு குறிப்பிடற்பாலது. இவர்கள் மேலும், யாழ்ப்பாணம், அநுராதபுரம், கொழும்பு நூதனசாலைகளுக்கும் சென்று அங்குள்ள சில கலைச் சின்னங்களிற்குத் தக்க விளக்கங்களும் அளித்து உள்ளனர். தமிழ் நாட்டுத் தொல்லியலாளர் முதன்முறையாக இம்மகாநாட்டிலே கலந்து கொண்டமை குறிப்பிடற்பாலது. தமிழ் நாட்டுத் தொல்லியல்துறை இயக்குநர் கலாநிதி இரா. நாகசுவாமி அவர்கள் யாழ்ப்பாணத் தொல்லியற் கழகத்திற்குச் சில அருமையான பிரசுரங்களும், மகாநாட்டிற்கு வாழ்த்துச் செய்தியும் அனுப்பியிருந்தார். இக்கருத்தரங்கிலே சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் அனைத்தும் விரைவிலே நூல் வடிவம் பெறும்.

---



ஒரே சிற்பத்தில் நான்முகன், சிவலிங்கம், உமை, முருகன், நரசிம்மர்
பல்லவர் காலம், முன்னூர், தென்னாற்காடு மாவட்டம்

# கல்வெட்டில் காளமேகம்

டாக்டர் இரா. நாகசாமி,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

காஞ்சிபுரம் காமாக்ஷி கோயில் கல்வெட்டுக்களை எங்கள் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்கள் படி எடுத்தனர். அவற்றை படித்துக்கொண்டே வரும்போது சில கல்வெட்டுகள், பாடல்களாக இருந் ததைக் கண்டோம். ஒரு கல்வெட்டு நிரடியது; அதை நான் படித்தேன். பாடல் யாப்பமைதிக்கு ஏற்ப திரும்பத் திரும்ப படிக்க முயன்றோம். இறுதியில் அதில் 'காளமுகில்' என்ற பெயரைப் படித்தேன். என்னை அறியாது ஒரு உணர்ச்சி - உவகை-மகிழ்ச்சி. காளமுகில் என்பது 'காள மேகத்தைக்' குறிக்கும் என என் மாணவர்களிடம் கூறினேன். அதற்கு மேல் என்னால் அங்கு நிற்க முடியவில்லை. விடுவிடு என்று ஓடிவந்து என் இருக்கையில் அமர்ந்துவிட்டேன். சில விநாடிகள் ஆயிற்று, அந்த படபடப்பு அடங்குவதற்கு. இதுகாறும் இலக்கிய வாயிலாகவே கேட்டி ருந்த ஒரு புலவனை, இப்பொழுது கல்வெட்டில் முதன்முதலாக நாம் பார்க்கிறோம் என்ற மகிழ்வு — சொல்லத் தெரியாத மகிழ்வு. மீண்டும் திரும்பிச் சென்று, பிற பாடல் கல்வெட்டுக்களையும் படித்தேன். என் கருத்து வலிப்பட்டு வருவதாகவே ஒவ்வொரு விநாடியும் உணர்ந்தேன்.

இதை யாரிடத்திலாவது சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்பு. தமிழ் இலக்கிய வரலாறு என்றாலே பேராற்றல் பெற்றுள்ள மு. அருணா சலம் அவர்களைத்தவிர வேறு யாரை நினைக்க முடியும்! எனக்குத் தமிழில் தோன்றியதையெல்லாம் அவரிடம் சொல்லி ஆசி பெறுவதோடு அளவ ளாவுவதும் வழக்கம். ஆதலின் அவருக்கு உடனே போன் பண்ணினேன். "அருணாசலம் பேசறேன்-நமஸ்காரம்-என்ன புதிய கண்டுபிடிப்பா" என்று கேட்டார். நான் "ஒரு பாடல் படிக்கிறேன், யார் எழுதியது என்று சொல்லமாட்டேன், அது யார் பாடல் போல் இருக்கிறது என்று நீங்கள் சொல்ல வேண்டும்" என்று புதிர் போட்டேன். 'சரி', படியுங்கள் பார்க கலாம்" என்றார். அவருக்குத் தமிழ் என்றாலே போதும், எப்பொழுதும் கேட்கத் தயார்! பாடலைப் படித்தேன், "பார்த்தால் காளமேகம் பாடல் போல தோன்றுகிறது, எங்கிருக்கிறது? என்று கேட்டார். "கல்வெட் டில் வந்திருக்கிறது. காஞ்சி காமாக்ஷி கோயிலில் இருக்கிறது. காளமேகம் பாடலே தான்", என்றேன். அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி "நீங்கள் சொல்வது சரிதான்" என்றார். வேறு என்ன வேண்டும் எனக்கு!

அன்றிரவு வெகுநேரம் தூங்கவில்லை. பல புத்தகங்களைப் புரட்டி, காளமேகத்தைப் பற்றிப் பார்த்துக் கொண்டிருந்தேன். காளமேகத்துக்குத்

காளமுகில் என்று பெயர் உண்டா என்பதே என் கேள்வி. காளமேகத்தைப் பாடலில் 'காளமுகில்' என்றே பாடியுள்ளார்கள். அந்தப் பாடலைப் படித்து விட்டேன். கல்வெட்டில் வரும் 'காளமுகில்' - காளமேகம்தான் என்பதற்கு இன்னம் வேறு என்ன சான்று வேண்டும்? நிம்மதியாகி, தூங்கிவிட்டேன். இதோ கல்வெட்டில் நான் கண்ட காளமுகிலும், காளமேகம் பாடலும்.

காஞ்சிக் கல்வெட்டு :

மண்ணில் இருவர் மணவாளர் மண்ணளந்த
கண்ண நவ னிவந்பேர் காளமுகில்-கண்ண
னவனுக்கூ ரெண்ணி லணியரங்க மொன்றே
இவனுக்கூ ரெண்ணு யிரம்.

பழம் பாடல் :

"காசுக்குக் கம்பன் கருணைக்கு அருணகிரி
ஆசுக்குக் காளமுகில் ஆனவனே-தேசுபெறும்
ஊழுக்குக் கூத்தன் உவக்கப் புகழேந்தி
கூழுக்கிங் கவ்வையெனக் கூறு"

---



மகரயாழ், மாதிரி உருவம், 7-ம் நூற்றாண்டு சிற்பத்தைக் கண்டு செய்தது.

# ARCHAEOLOGICAL FINDINGS AT KUDAVASAL

M. Balasubramaniam B. Sc.

Kudavasal (Thanjavoor Dist.) has been called "KUDAVAYIL KOTTAM" in Sangam literature. The poems in *Agananooru*, *Narrinai* etc., refer to a safeguarded treasury and a prison in Kudavayil. The inscriptions of Brahadisvara temple of Tanjore mentions the village assembly of Kudavayil. The 9th century inscription of the Jain Cave temple at Tiruccharanathumalai (Kanyakumari Dist.) makes mention of the Jain pilgrims of Kudavayil. The Saiva Saints Thiru-Jnana-Sambandar and Arunagirinathar in their Kudavayil Pathigams mention briefly about Kudavayil. 'A *Madakkoil* (மாடக் கோயில்) was built by the early Chōla Kochenganan in this village.

Kudavasal is also surrounded by villages of historic importance. The places are (1) Thalaiyālamkānam of Sangam fame (2) Dipangudi (birth place of Jayamkondan the author of Kalingathuparani) (3) Jayasingakulakalapuram now called as Sengalipuram. (4) Vandalancheri a place of Karunakara Tondaiman, General of Kulothunga. (5) Avanam (ancient registration office).

An inscription describes that Kudavayil was situated at the Cerrūr kūrram in Kshatriya Sikāmani Valanāḍu.

My frequent visits during the rainy season proved to be useful as I found on the errosive bed of the land at Kottaram some valuable antiquities. Kottaram is a dilapilated place, two km. east of Kudavayil town.

My efforts were rewarded with the findings of a precious & beautiful gold coin, more than ten copper coins, a piece of conch-shell bangle, pottery pieces and a stone image of Jyeshta.

The copper coins carry a rude human figure standing on the obverse and seated on the reverse. These copper coins are in three different sizes. and among one tiny coin, minute Tamil letters are found embossed on the reverse.

The gold coin has a standing human figure on the obverse (as in the "Ceylon type" coin of Raja Raja I) and on the reverse, a conch figure on the top & three Nagari letters below. The Director of

Tamil Nadu Archaeological Department, DR. Nagaswamy assigns this coin to 11th Century A.D. and reads the letters as "*uraka*".

In "Avanam" a nearby village of Kottaram, I found a large beautiful lingam and Nandi but not looked after by the rural people. Very near to that place an inscription with "*thiri sula*" emblem on the top was noted by me. It relates to the gift of lands to the temple of Kailasanathar of Avanam. In 1960 in the same place about 10 Bronze images were found by the villagers. All these are now in the Madras Museum.

In the same place I found a square coin which was cleaned by the Tamil Nadu Archaeological Dept. This turned out to be an important coin. On the obverse is a standing tiger with an upraised paw and the tail raised and curved at the back. The reverse is corroded.

Dr. Nagaswami is of the view that it may date from 2-4th century A.D. and considers this as a Chola coin of the Sangam age. Dr. K. V. Raman, Professor of Archaeology who also examined the coin, agrees with the view, and told me it is similer to the square coins found in Kaveripattinam, during excavation.

Kudavayil (Kudavayil kottam) and Avanam should have been very important centres under the Cholas.